# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 08 அதிர்வு 95 வைகாசி 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162










**ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்**

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI









# வெறுப்பலையில் நசுங்கிய தமிழ்க் குரல்

“கிடக்கிறது எல்லாம் கிடக்கட்டும், கிழவியைத் தூக்கி மனையில வை” - என்று ஒரு பழமொழி எங்கள் கிராமப்புறங்களில் சொல்வார்கள். அதே போன்று தான் ஆகிவிட்டது இப்போது முடிந்த ஆஸ்திரேலிய நாடாளுமன்ற தேர்தல். இந்தத் தேர்தலில் வரலாறு காணாத வெற்றியை தொழிலாளர் கட்சி பெற்றிருக்கிறது என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. நாம் அந்த வெற்றியினைப் பற்றி இங்கே அலசப்போவதில்லை. பல வருடங்களாக இந்த மண்ணில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகங்கள் எவ்வாறு வாக்களித்தன? எந்தக் காரணிகள் எல்லாம் அவர்கள் வாக்குகளைத் தீர்மானித்திருக்கலாம் என்பதை மட்டும் இந்தக் கட்டுரையில் அலசலாம் என்றிருக்கிறேன்.

பிரதமர் ஹாவ்க் காலம் தொட்டே அகதிகள் சார்புநிலை காரணமாக வெகுகாலமாகவே தொழிலாளர் கட்சிக்கே புலம்பெயர் தமிழ்மக்கள் ஆதரவளித்து வருகின்றனர். கிடைத்த புள்ளி விவரங்களின் படி கிட்டத்தட்ட 62 சதவிகித புலம்பெயர் தமிழர்கள் தொழிலாளர் கட்சிக்கே வாக்களித்திருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தமுள்ள புலம்பெயர் தமிழ்மக்கள்தொகையில் (155,000 பேர் ) கிட்டத்தட்ட (இந்தியாவை சேர்ந்த தமிழ் மக்களும் அடக்கம் ) 97,000 பேர் தொழிலாளர் கட்சிக்கே வாக்களித்திருக்கின்றனர். கடந்த தேர்தலோடு ஒப்பிடும்போது இந்த முறை வெறும் 2.1 சதவிகித கூடுதல் வாக்குகளே தொழிலாளர் கட்சியின் சரித்திர வெற்றியைத் தீர்மானித்திருக்கின்றன. ஆதலால் இந்தத் தேர்தலில் புலம்பெயர் தமிழர் வாக்குகள் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தியதாகச் சொல்ல முடியாது. ஆனால் மற்ற இந்தியப் புலம்பெயர் மக்களின் வாக்குகள் நேரடியாக தொழிலாளர் கட்சிக்கே சென்றிருக்கின்றன என்பதை நாம் முற்றிலும் மறுக்க முடியாது. குறிப்பாக 500,000 புலம்பெயர் மக்களின் வாக்குகள் இருக்கலாம் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தேர்தலில் நாடெங்கும் பல்வேறு தொகுதிகளில் புலம்பெயந்த தமிழ்ச் சமூக மக்கள் போட்டியிட்டனர். நமக்கு கிடைத்த தகவல்களின் படி முறையே அஸ்வினி அம்பிகைபாகர் (Barton (NSW),), சமந்தா ரத்தினம் (Wills - VIC), மிஷேல் ஆனந்தராஜா (செனட்), சுஜன் செல்வன் (செனட்), பழனியப்பன் சுப்ரமணியன் (Greenway - NSW ) ஆகியோர் இம்முறை தேர்தலில் போட்டியிட்ட புலம்பெயர் தமிழர்களாவர். இந்த ஐவரில் அஸ்வினியைத் தவிர மற்ற எவரும் வெற்றி பெறவில்லை.



**ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி**

இந்தக் கட்டுரை எழுதும் சமயத்தில் மிஷேல் ஆனந்தராஜா முன்னிலையில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. அவர் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இருப்பதால் மொத்தமாக இரண்டு பேர் மட்டுமே ஒட்டு மொத்தமாக தமிழ் சமூகத்தை பிரதிபலிக்கும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது. இதில் ஒரு பக்கம் மகிழ்ச்சி எனினும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்களும் பெரும்பான்மையான தொழிலாளர் மக்களவையில் என்ன பங்களிப்பு ஆற்றப்போகின்றனர் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். இந்த அல்பானிஸ் அரசாங்கம் தேர்தலுக்கு சில மாதங்கள் முன்பே புலம்பெயர் அகதிகளுக்கு எதிராக கடுமையான சட்டங்களை நிறைவேற்றியது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

## அஸ்வினி அம்பிகைபாகரின் வரலாற்று வெற்றி

வழக்கறிஞரான அஸ்வினி 19% தெற்காசிய மக்கள்தொகை கொண்ட பார்டன் (NSW) தொகுதியில் தனது பிரசாரத்தை மட்டுமே மையமாகக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார் அவரது வெற்றிக்கு லிபரலுக்கு எதிரான அலையே காரணமெனினும் மற்ற காரணங்கள் பின்வருமாறு

- ❑ வயதான புலம்பெயர்ந்தோருக்கு எளிய மருத்துவ பராமரிப்பு அணுகுமுறை
- ❑ வீட்டு வாடகை சந்தையில் பாகுபாடுகளுக்கு எதிரான சீர்திருத்தங்கள்.
- ❑ திறமைவாய்ந்த தொழிலாளர்களுக்கான விசா பாதைகள் எளிமைப்படுத்துதல்

## சமந்தா ரட்ணத்தின் தோல்வி

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சமந்தா ரட்ணத்தின் தோல்விக்கு காரணம் பல இருப்பினும் முக்கியமான காரணங்கள் பின்வருமாறு

1.. சமந்தா ரத்னம் பிரன்சுவிக் நகரில் 55% க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருப்பினும், பிரன்சுவிக் நகருக்கு வெளியே தொழிற்கட்சியின் பீட்டர் கலீல் வலுவான முன்னிலையைப் பெற்றார். சமூக ரீதியாக பழமைவாத வாக்காளர்களை அந்நியப்படுத்திய காலநிலை குறித்த முற்போக்கான செய்திகளை மிகைப்படுத்துதல், காசா பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது போன்ற பல காரணங்கள் இருக்கலாம்.

2. பசுமைக் கட்சியை நோக்கிய சாய்வு மற்றும் லிபரல் வாக்குகள் சரிவு ஆகியவற்றால் ரத்னம் பயனடைந்தாலும், பீட்டர் கலீல் லிபரல் மற்றும் ஒன் நேஷன் வேட்பாளர்களிடமிருந்து முக்கியமான இரண்டாவது விருப்பு வாக்குகளைப் பெற்றார். அதே போல் வாக்கு எண்ணிக்கை தொடர்ந்த போது அவரது முதன்மை வாக்குகளில் அதிகரிப்பையும் பெற்றார். ஆனால் சமந்தாவிற்கு முன்னணி வாக்குகள் கிடைக்கவில்லை.

3. அது மட்டுமின்றி இந்த தேர்தலில் க்ரீன்ஸ் கட்சிக்கு எதிரான தொடர்ச்சியான சமூக ஊடகங்கள் வாயிலாக பரப்பப்பட்ட எதிர்ப்பு பிரசாரமும் அவரது தோல்விக்கு முதன்மையான காரணமே.

இதேவேளை தமிழர்களின் இனப்படுகொலை - அகதிகள் குறித்து தொடர்ந்து விக்டோரிய மாநில நாடாளுமன்றத்தில் குரெழுப்பியவர். அதுமட்டுமின்றி இனப்படுகொலைக்கெதிரான போராட்டங்கள் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுபவர். அண்மையில் நடைபெற்ற அகதிகளின் நூறு நாட்கள் போராட்டங்களில் அதிக நாட்கள் கலந்துகொண்டிருந்தவர். இப்படிப்பட்ட ஒருவருக்கான நிதி சேகரிப்பு நிகழ்வை ஒரு தமிழ் அமைப்புகளும் நடத்தவே இல்லை என்பது எமது சீற்றத்துக்குரிய விடயமாகும். இவ்வாறானவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டியதே சாலச்சிறந்தது.

## சுஜன் மற்றும் பழனியப்பன் தோல்வி

சுஜனுக்கு ஆதரவாக வலுவான பிரசாரம் நடைபெற்றபோதிலும் அவருக்கு கிடைத்த வாக்குகள் அனைத்தும் அவரது பசுமைக்கட்சியின் வெற்றிக்கே சென்றன. ஒட்டுமொத்த NSW மாகாணத்தில் கிரீன்ஸ் பெற்ற செனட் வாக்குகள் 472,718 மட்டுமே. இது கடந்த தேர்தலோடு ஒப்பிடும்போது 0.3 சதவிகிதம் சரிவு. ஆதலால் கிரீன்ஸ் கட்சிக்கு ஒரு இடம் மட்டுமே கிடைத்திருக்கிறது. மற்ற புலம்பெயர் சமூக வாக்குகள் கிடைத்திருந்தால் ஒருவேளை சுஜன் வெற்றி பெற்றிருக்கலாம்.

கிரீன்வே தொகுதியில் போட்டியிட்ட பழனியப்பன் சுப்ரமணியன் கிட்டத்தட்ட 10,000 வாக்குகள் பெற்று லேபர் கட்சியின் கோட்டையில் மூன்றாம் இடம்பெற்றிருக்கிறார். தொகுதியில் உள்ள பெரும்பாலான தமிழர் வாக்குகள் கிடைத்தபோதிலும் மற்ற இந்திய சமூகத்தின் வாக்குகள் அனைத்தும் லேபர் வேட்பாளர் மிட்சேல் ரோலாண்ட்டுக்கே கிடைத்தன.

பெரிய கட்சிகளுடன் ஒப்பிடும்போது கிரீன்ஸ் கட்சி மட்டுமே பெரும்பாலான புலம்பெயர்ந்த சமூக மக்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறது. இல்லையென்றால் இத்தனை தமிழ் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட வாய்ப்பே இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் நாம் தொடர்ந்து லேபர் கட்சிக்கே வாக்களிக்க போகிறோமா ? இல்லை நம்மை எந்தக் கட்சியினர் பிரதிநிதித்துவம் செய்கிறார்களோ அவர்களுக்கு வாக்களிக்க போகிறோமோ ?

குறிப்பாக 12% தமிழ் மக்கள் வாழும் பரமாட்டா தொகுதியில் ஏன் ஒரு தமிழரை லேபர் / லிபெரல் கட்சி நிறுத்தவில்லை? நாம் என்று யோசிக்க போகிறோம்?. இறுதியாக ஒரு விஷயத்தை சொல்லிவிட்டு கட்டுரையை முடிக்கலாமென்று நினைக்கிறேன் . வாக்கு எண்ணிக்கை நடைபெறும்போது முன்னணியில் இருந்த அஸ்வினி அம்பிகைபாகரின் பெயரினை சொல்வதற்கு ABC தேர்தல் நிபுணர் அந்தோணி கிறீன் திணறிவிட்டு பிறகு தொழிலாளர் கட்சி வேட்பாளர் வெற்றி என்று முடித்தது நம்மால் மறக்க முடியுமா? இந்த இடத்தில் தான் நாம் இன்னும் இருக்கிறோம். பெயரை மாற்ற வேண்டிய அவசியமில்லை. நமது தலையெழுத்தினை மாற்றும் இடத்திற்கு நகரவேண்டும். ■

# முள்ளிவாய்க்கால்

இரத்தமும் உயிரும் உறைந்து
அனலடிக்கும் இந்த மணல் வெளியில்
நேற்றும் பட்டி பூத்திருந்தது
இன்றும் பூத்திருக்கிறது
நாளையும் பூக்கும்

நேற்றைய பட்டிப் பூக்கள் தனித்திருந்தன.

இன்று
வெள்ளை உடைகளில் விருந்தாளிகள் வந்தனர்.
சுடர்களை ஏற்றினர்.
பட்டிப் பூக்களை மேவி
எடுத்து வந்த பூக்களைப் பரப்பினர்

துயரும் அழுகையும் மீட்கப்பட்டது

மண்ணடுக்குகளில்
துயரில்
ஆழப் புதைந்துறங்கிய மனிதர்கள்
மெல்லக் கண் திறந்து
நேற்றைய நாளை நினைவு கூர்ந்தனர்
அப்படியே
இன்றைய நாளைப் பார்த்தனர்.

எரியும் சுடர்
பலியிடப்பட்டோரையெல்லாம்
பெருகியோடும் கண்ணீரில் பிரதிபலித்தது

பொழுதகல
துயர் விழாவின் காட்சிகளெல்லாம் மெல்ல மாறின
ஏற்றிய சுடர்கள் அணைய முன்
பரப்பிய மலர்கள் வாடமுன்
எல்லோரும் திரும்பிச் சென்றனர்.

மண்ணடுக்குகளில் விழிதிறந்த மனிதர்கள்
மறுபடியும் தனித்தனர்
பட்டிப் பூக்களும் தனித்தன

நாளையும் தனித்தே பூக்கும் பட்டி

- கருணாகரன்



**வலி சுமந்த பெரு நிலத்தில்**
**ஆகுதியாகிய அனைவருக்கும்**
**ஒன்பதாவது ஆண்டில் கண்ணீர் அஞ்சலிகள்**

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 95 வைகாசி 2025 தொ.பே:1800 960162

## கனடா வாழ் தமிழர்களிடமிருந்து கற்றுக்கொள்வோம்!

கரு சுமந்த தாய்மார் முதல், பச்சிளம் குழந்தைகள்வரை மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் ஊழித் தாண்டவம் அரங்கேறி 16 வருடங்கள் கடந்துவிட்டன. காலங்கள் இவ்வாறு காற்றாக பறந்து சென்றாலும் போர் தந்த வலிகள் – வடுக்கள் தாயக மக்களின் வாழ்வில் இருந்து இன்னும் நீங்கவில்லை. அதுமட்டுமல்ல தமிழர்களுக்கான தலைமைத்துவ மென்பதும் இன்னும் வெற்றிடமாகவே உள்ளது.இப்போது விடுதலை நோக்கிய அரசியல் பயணம் திசைமாறி வாக்கு வேட்டைக்கான அரசியலாக மாறியுள்ளது. தமிழ்த் தேசியமும் தடம்மாறி பயணித் துக்கொண்டிருக்கின்றது. இந்நிலைமை நிச்சயம் மாற்றியமைக் கப்பட வேண்டும். இது விடயத்தில் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு தவிர்க்க முடியாததொன்றாகும்.

இலங்கையில் நடந்து முடிந்த உள்ளூராட்சிசபைத் தேர்தல் ஊடாக தமிழ் மக்கள் சிறந்த – உறுதியான செய்தியை வழங்கி யுள்ளனர். தமிழ்த்தேசியத்துக்கான அரசியலை அவர்கள் அங்கீ கரித்துள்ளனர். தமிழ்த் தேசியக் கட்சிகள் எதை நோக்கி பயணிக்க வேண்டும் என்பதையும் எடுத்துரைத்துள்ளனர்.தமிழர்களின் அரசியலில் தமிழீழ விடுதலைப்புலிகள் இல்லாத ஆண்டுகளாகவே 16 வருடங்கள் கடந்துள்ளன. ஆனால் அவர்கள் காட்டிவிட்டு சென்ற வழி இன்னும் மாறவில்லை: மக்கள் மறக்கவும் இல்லை. எனவே, புலம்பெயர் தமிழர்கள் தாயக மக்களுக்காக எப்போதும் துணை நிற்க வேண்டும். அதற்கான நேசக்கரத்தை கனடா வாழ் தமிழர்கள் நீட்டியுள்ளனர்.

தாயகத்துக்கு வெளியே கனடா, பிரம்ப்டன் மாநகரில் எழுச்சி பெற்றுள்ள முள்ளிவாய்க்கால் நினைவகம் தமிழர்களின் உணர்வெழுச்சிக்கான ஓர் அங்கீகாரம் – அடையாளம் – அடித்தளம் என்றே கூறலாம். கனடாவில் இத்தகைய நினைவகம் மலர அங்கிருக்கும் மக்களின் உணர்வு – பேரம் பேசும் தலைமைத் துவம்– அரசியலில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை உயர்த்து தல்– இவையே பிரதான காரணங்களெனலாம்.விடுதலைப்புலி களின் ஆட்சிக்காலத்தில் அவர்களது அரசியல் வழிகாட்டுதல்கள் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களை வழி நடத்தியிருந்தது. அந்த வழிகாட்டுதலின் பிரதிபலனே இன்று கனடாவில் மக்களின் ஒருங்கிணைவுடன் திறக்கப்பட்டிருக்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவகமாகும்.ஆனால் கனடா வாழ் புலம் பெயர் தமிழர்களிடம் – தமிழ் அமைப்புகளிடமுள்ள ஒற்றுமை ஆஸ்திரேலியா வாழ் புலம்பெயர் தமிழர்களிடம், அமைப்புகளிடம் உள்ளனவா என்பதை நிச்சயம் மனச்சாட்சியிடம் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது.

விக்டோரிய மாநிலத்துக்கான கிறீன்ஸ் கட்சியின் மாநிலத் தலைவராகவும் – மாநில நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து வந்தவர் சமந்தா ரட்ணம். இவர் இனப்படுகொலைக்கான நீதி – பொறுப்புக்கூறல் முதல் அகதிகளின் நிரந்தர வாழ்வு குறித் தும் பல முறை நாடாளுமன்றில் பேசி வந்தவர். போராட்டங்களில் பங்கேற்றவர்.ஆனால் பல தமிழர்கள் நடத்திய நிகழ்வுகளில் சமந்தா ரட்ணத்தை அழைப்பதை பார்த்திருக்க முடியாது. வெள்ளைக்கார துரைமார்களை அழைத்து துண்டைபோட்டு, பொட்டு வைத்து – கொண்டாடி அனுப்பி வைப்பார்கள். அதில் பெருமிதம். இந்நிலைமை தொடர்ந்தால் அதன் விளைவு எப்படி அமையுமென்பதற்கு நாடாளுமன்றத் தேர்தல் முடிவு ஓர் சான்று.

இம்முறை ஆஸ்திரேலிய நாடாளுமன்ற தேர்தலில் களம் காண்பதற்காக தான் வகித்து வந்த அனைத்து பதவிகளையும் துறந்திருந்தார் சமந்தா ரட்ணம். ஆனால் இத் தேர்தலில் மிகவும் சொற்பளவிலான வாக்கு வித்தியாசத்தில் தனது ஆசனத்தை இழந்திருந்தார். சமந்தா ரட்ணம் போன்றவர்களை நாடாளுமன்றத் துக்கு அனுப்பிவைக்கவேண்டும் என எத்தனை தமிழர்கள் பாடுபட்டார்கள் என்ற கேள்வியை எழுப்பினால் மிகவும் சொற்பமானவர்களே அல்லது இல்லை என்றே சொல்லவேண் டும்.

பல வேட்பாளர்களிற்கு வாக்கு சேகரிப்பது முதல் பணம் சேகரிப்பு வரை மும்முரமாக நடைபெற்றதாகவும் கேள்வி பட்டிருப்பீர்கள். ஆனால் தமிழர்கள் சார்ந்து அனுப்ப வேண்டிய சமந்தா ரட்ணம் போன்றோரை இந்த சமூகம் மறந்து செயற்பட்டுள்ளது. பரமட்டா தொகுதியிலும் இவ்வாறே தமிழ் வேட்பாளர் ஒருவருடைய இடம் சுரண்டிக் கொடுக்கப்பட்டது. அப்போதும் நாம் கண்டுகொள்ளவே இல்லை. எமது இனம் சார்ந்த – திராணியுள்ளோரைதான் நாம் நாடாளுமன்றம் அனுப்பி வைக்க வேண்டும்.

பேரம் பேசுதல் என்பது அரசியல்வாதிகளிடம் கோயிலுக்கு நிதி டீல் செய்வதும், கும்பாபிஷேகத்துக்கு அழைத்துவருவதும் அல்ல என்பதை எப்போது எம் சமூகம் புரிந்துகொள்கிறதோ அப்போதுதான் விழித்துக்கொள்ளும்!!

கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழர்களிடமிருந்து ஆஸ்திரேலிய புலம்பெயர் தமிழ் சமூகம் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம் எனக் கூறலாம்.

# உலகெங்கும் இனப்படுகொலை நினைவகங்கள் எழவேண்டும் எட்டுத்திக்கிலும் நீதிக்கான குரல் ஒலிக்க வேண்டும்





**தாயகத்தில் நடத்தப்பட்ட இனவழிப்பில் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக கனடா வின் பிரம்டன் நகரத்தில் உள்ள நகர பூங்காவில் தமிழின அழிப்பு நினைவகம் திறந்து வைப்பட்டது. இந் நினைவகம் குறித்து கனேடியத் தமிழர் தேசிய அவையின் தலைவர் பேராசிரியர் இரா.சிறீ ரஞ்சன் அவர்களுடனான நேர்காணல் இது.** **-நேர்கண்டவர் ஜே.ஜே.-**

**கேள்வி: தமிழின அழிப்பு நினைவகம் உருப்பெற காரணம் என்ன?**

*பதில்: யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் அமைக்கப் பட்டிருந்த தமிழின அழிப்பு நினைவிடத்தை தை மாதம் 8ஆம் திகதி 2021ஆம் ஆண்டு இலங்கை அரசு இடித்தழித்திருந் தது. இவ்விடிப்பு சம்பவம் உலக தமிழர்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. இந்த இடித் தழிப்பே தமிழின அழிப்பு நினைவகம் கனடாவில் உயிர் பெற காரணமாக இருந்தது.*

**கேள்வி: தமிழர் தேசிய பேரவை மட்டும் தான் தமிழின அழிப்பு நினைவிடத்தை நிறுவ முயற்சி செய்ததா..?**

*பதில்: இல்லை. எங்களிடம் பொறுப்பு கொடுக்கப்பட்டது. யாழ்.பல்கலைக்கழகத்தில் இடித்தழிப்பு செய்யப்பட்ட அதே மாதம் 20 ஆம் திகதி பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண் அவர்களின் தலைமையில் தமிழின அழிப்பு நினைவகம் ஒன்றை கட்டுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கனேடியத் தமிழர் தேசிய அவையை பிரம்டன் தமிழ் ஒன்றியம், பிரம்டன் தமிழ் மூத்தோர் சங்கம் மற்றும் ஏனைய பங்காளிப்பாளர்களுடன் இணைந்து இத்திட்டத்தை முன்னெடுக்குமாறு 2023 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி மேலும் ஒரு தீர்மானம் பிரம்டன் மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டது.*

**கேள்வி: தமிழின அழிப்பு நினைவகத்தின் வடிவம் குறித்து மக்கள் மத்தியில் கோரிக்கை விடுத்து அவர்களின் கருத்துகளை உள்வாங்கி உருவாக்கினீர்களா அல்லது உங்கள் அமைப்புக்குள் உள்ளோரால் வடிவமைக்கப்பட்டதா?**

*பதில்: இனவழிப்பு என்பதை இங்கு வருவோர் தெளிவாகப் புரிந்துகொள்ள கூடிய - நாம் மீண்டெழுந்து வருவோம் - இந்த இனவழிப்பு எங்கு நடந்தது போன்ற விடயங்கள் உள்ளடங்கிய வகையில் வடிவமைப்பு வேண்டும் என நாங்கள் மக்கள் மத்தியில் கோரியிருந்தோம். பெருமளவானோர் அனுப்பியிருந்தனர். அவ்வாறு கோரப்பட்ட இடத்தில் ஒரு சீக்கிய இனத்தை சார்ந்த ஒருவரும் அனுப்பியிருந்தார். அவரது வடிவமைப்பே பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதேவேளை சிலர் அதற்கு எதிர்ப்பும் வெளியிட்டனர். தமிழர்களின் வரை வடிவமைப்புகளில் ஒன்றை தெரிவு செய்திருக்கலாம் என்ற எதிர்ப்பு வந்தது. ஆனால் இதில் இனவழிப்பின் வடிவம் சரிவர தெரியவேண்டும் என்பதே எமது நோக்கமாக இருந்தது. அந்த வகையிலேயே தற்போது இருப்பது தெரிவு செய்யப்பட்டது.*

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.


நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# உலகெங்கும் இனப்படுகொலை நினைவகங்கள் எழவேண்டும் எட்டுத்திக்கிலும் நீதிக்கான குரல் ஒலிக்க வேண்டும்




(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி: தமிழின அழிப்பு நினைவகத்தின் அடையாளங்கள் எவற்றைக்குறிக்கின்றன? அசை எவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டன?**

பதில்: புத்தகம்: துருப்பிடிக்காத உருக்கிலான புத்தகம் தமிழர்வரலாற்றையும் அவர்கள் மீது நடத்தப்பட்ட இன வழிப்பையும் சுட்டக்காட்டி நிற்கிறது.

தமிழீழ வரைபடம்: இலங்கைத்தீவில் தொன்று தொட்டு தொடர்ந்து வரும் தமிழர்வரலாறு - அவர்களின் பண்பாடு- தன்னாட்சியுரித்துடைய அவர்களின் தாயகம் - அத்தாயகத்தில் தமிழர்கள் மீது நடத்தப்படும் இனவழிப்பையும் குறிக்கிறது

கைகள்: பித்தளையால் செய்யப்பட்ட கைகள் தாயகத்தைப் பாதுகாப்பதில் கொண்டுள்ள உறுதிப்பாட்டையும் சர்வதேசத்தின் துணையுடன் தமது வரலாற்றைப் பாதுகாப்பதையும் குறிக்கிறது.

சுவர்கள்: ஒன்பது சுவர்கள் நிறுவப்பட்டுள்ளன. தமிழீழத்தின் ஒன்பது மாவட்டங்களையும் குறிக்கின்றன. ஒவ்வொரு சுவர்களிலும் வெளிப்புறத்தில் 1948 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்ட இனவழிப்புகளின் ஆவணப்படுத்தலையும் சுவரின் உட்புறங்கள் அவற்றின் முழுமையான விபரங்களையும் கொண்டிருக்கின்றன.

தூண்கள்: கருங்கற்களால் செய்யப்பட்டவை. தமிழர்களின் பாரம்பரிய கட்டடகலையையும் பாரம்பரியத்தையும் காட்டிநிற்கின்றன.

**கேள்வி: சரி, முள்ளிவாய்க்கால் படுகொலை - நினைவு நாள் என்றுதானே பல இடங்களில் நினைவு கூறப்படுகிறது. ஆனால் நீங்கள் இனவழிப்பு நினைவகம் என்று பெயரிட்டுள்ளீர்களே?**

பதில்: முள்ளிவாய்க்கால் ஒரு குறியீடாக இருக்கலாம் ஆனால் சொல்லவேண்டிய விடயம் இன அழிப்பே!

இனப்படுகொலை என்று சொல்வது தவறு. இன அழிப்பு என்பது இனப்படுகொலை மட்டுமல்ல. ஒரு இனக்குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அவர்களது வாழ்க்கையை வாழ முடியாமல் செய்வது இனவழிப்புதான். இப்போ நடந்துகொண்டிருப்பதும் இனவழிப்பு தான். அதற்காகத்தான் முதல் நடந்தது மட்டுமின்றி தொடர்ந்தும் இனவழிப்பு நடந்துகொண்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுவதற்காகதான் தமிழின அழிப்பு என பயன்படுத்துகிறோம். இலங்கையில் தமிழின அழிப்புதொடர்ந்தும்நடைபெறுகிறதுஎனநினைவகத்தில் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கேள்வி: இந்நினைவக உருவாக்கத்துக்கான நிதியை எப்படித்திரட்டினீர்கள்..? எவ்வளவுபணம்செலவுசெய்யப்பட்டது?**

பதில்: 20 வருடங்களுக்கு நாங்கள் தான் பராமரிப்பு செய்யவேண்டும். அதன் பின்னர் நகர சபையே அதன் பரமரிப்பு வேலைகள் செய்யும். நிலம் மட்டும் இலவசமாக வழங்கப்பட்டது. மக்களிடமிருந்து சுமார் அரை மில்லியன் டொலர் வசூலிக்கப்பட்டது. அதனை விட தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டு அல்லுபகலும் வேலை செய்திருந்தனர். சுமார் 100 பேர் தினமும் வேலை செய்வர். அவர்களுக்கான உணவை எங்களின் மக்களே வழங்கினர்.

**கேள்வி: நினைவகத்தில் இடம்பெற்றுள்ள புத்தகம், கை, தூண்கள் போன்ற படிமங்கள் கனடாவில் தான் செய்யப்பட்டனவா அல்லது வேறு இடங்களில் செய்யப்பட்டு தருவிக்கப்பட்டனவா?**

பதில்: தூண்கள் மகாவலிபுரத்தில் செய்யப்பட்டு கொண்டுவரப்பட்டன. கைகள் மற்றும் புத்தகம் என்பன சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்டன.

**கேள்வி: தாயகம் முதல் புலம்பெயர் தேசமெங்கும் முள்ளிவாய்க்கால் நினைவு நாளை யார் நடத்துவது என்பதில் போட்டிக்கு மேல் போட்டியாக உள்ளது. நீங்கள் எப்படி நடத்துவதாக திட்டம்?**

பதில்: எங்கள் அமைப்பு நினைவேந்தலை, நாம் தான் நடத்துவதாகச் சொல்வதில்லை. அமைப்புகளின் பெயர்களை போட்டுக்கொள்வதில்லை. மாணவர் சமூகமும் மக்களும் சேர்ந்து தான் நினைவேந்தலை நடத்துவார்கள்.

**கேள்வி: இந் நினைவகத்தை பார்வையிட நேரகாலம் கட்டணம் ஏதாவது உண்டா..?**

பதில்: கட்டணம் ஏதும் இல்லை. பூங்காவை பார்வையிடும் நேர வரையறையை பொறுத்து பார்வையிடலாம்.

**கேள்வி: இலங்கை அரசின் ஏவல் கைக்கூலிகள் நினைவகத்தை சிதைப்பதற்கான முயற்சி செய்தால் அதனை தடுப்பதற்கான திட்டம் - பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏதும் உண்டா?**

பதில்: அதனை பற்றியும் நாங்கள் யோசித்திருந்தோம். அப்படி நடந்தால் அச்சம்பவத்தை தழுவி தமிழின அழிப்பை மறுத்தோருக்கு எதிரான சட்டத்தை கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை செய்ய வாய்ப்பாக அமையும். அதாவது யூத இன மக்களின் ஹாலோகாஸ்டை மறுதலித்தால் தண்டனைக்குரிய குற்றம். அதேபோல்ஒருசட்டத்தைகொண்டுவருவதற்கானவழியை அவர்களே ஏற்படுத்திக்கொடுப்பார்கள்.

**கேள்வி: இவ்வளவு விடயத்தையும் ஒப்பேற்ற விடாமல் செய்யும் வகையில் இலங்கை அரசின் அழுத்தங்கள் ஏதும் வரவில்லையா?**

பதில்: பல ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்டன, பல வழக்குகள் தொடுக்கப்பட்டன. அனைத்தும் வெற்றி கொள்ளப்பட்டன. இலங்கை அரசு, கனடா அரசுடன் பேச்சு நடத்தியது. ஆனால் நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு தாங்கள் தலையிட முடியாது என அரசு அவர்களுக்கு கைவிரித்துவிட்டது.

**கேள்வி:தமிழகத்தை தாண்டி இதுதானே புலம் பெயர்தேசத்தில் அமைக்கப்பட்ட முதலாவது தமிழின அழிப்பின் நினைவகம்..?**

புதில்: இல்லை. மொறிஸியஸிலும் அமைத்துள்ளனர்.

**கேள்வி: நீங்கள் ஒரு பிரமாண்ட நினைவகத்தை அமைத்துவிட்டீர்கள். ஏனைய புலம்பெயர் நாடுகளில் தமிழின அழிப்பு நினைவகம் பிரமாண்டமாக அமைய வேண்டுமா ?அல்லது தமிழின அழிப்பு நினைவகம் ஒன்று அமைத்தால் போதுமானதா..?**

புதில்: இதைபோல எல்லா இடங்களிலும் செய்ய வேண்டும். அப்போதுதான் நீதிக்கான குரல் எல்லா திசைகளிலும் ஒலிக்கும்.

**கேள்வி:அந்த நினைவகங்களும் கனடா நினைவக வடிவத்தை ஒத்ததாக இருப்பது நல்லதா?**

புதில்: இல்லை இல்லை என்ன வடிவமைப்பில் வைத்தாலும் அது பிரச்சினையில்லை. சின்னது பெரியது என்பதிலும் பிரச்சினை இல்லை. ஆனால் பெரிதாக இருந்தால் அதிகமான மக்கள் வந்து பார்ப்பார்கள் .

**கேள்வி: கனடாவைப் பொறுத்தவரை அரசியலில் தீர்மானம் மிக்க சக்தி கொண்டவர்களாக ஈழத்தமிழர்கள் உள்ளனர். எனினும் ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை பல மாநிலங்களில் ஈழத்தமிழர்கள் சிதறுண்டு வாழ்கின்றனர். ஆகவே நாகராட்சி மன்றங்கள் சிறிய நிலங்களை வழங்குவதால் பெரியளவில் செய்ய முடியாது. எனினும் அதற்காக நினைவகம் ஒன்றை செய்யாமலே ஒதுக்கிவிடவும் முடியாது. இதற்கு என்ன தீர்வினைக் கண்டடையலாம்?**

புதில்: ஒருவிடயத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கனடா நினைவகத்தை உருவாக்க காரணமான பற்றிக் பிறவுண் 2009 ஆம் ஆண்டு , பேறே என்ற இடத்தில் எம்.பி.யாக இருந்தவர். அந்தப் பகுதியில் இரண்டு அல்லது மூன்று தமிழ்க்குடும்பங்கள்தான் இருந்தன. யுத்தத்தை நிறுத்த வழி செய்யுங்கள் என்று அந்தக் குடும்பங்கள் அவரிடம் எமது இனவழிப்பு குறித்து சொன்ன விடயம் தான் இன்று அவர் இந்த நினைவகத்தை உருவாக்குவதற்கான விதை. ஆகவே இங்கு வாக்கு விகிதம் செல்வாக்கு செலுத்தவில்லை. இப்படியொரு நினைவகத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை நாம் அரசியல்வாதிகளிடம் ஏற்படுத்தினாலே போதும். மிகுதி தன்னாலே நடக்கும்.

**கேள்வி: இந்நினைவகத்தை உருவாக்கியவர்களில் நீங்களும் ஒருவர். இந்த விவகாரத்தால் நீங்கள் தாயகம் திரும்புவதில் சிக்கல் இல்லையா..?**

புதில்: இல்லை. இப்போது போகமுடியாது. அப்படி இலங்கைக்கு மீண்டும் செல்வதில் தனிப்பட்ட ரீதியாகவும் எனக்கு உடன்பாடில்லை.



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்னாகும்?

● ஜெரா

மே 18ஆம் திகதி ஈழ இனப்படுகொலையின் நினைவேந்தல் நாள். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்தில் இந்த நினைவேந்தல் கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றமை அனைவரும் அறிந்ததே. ஆனால் அண்மை நாட்களாக அங்கு இடம்பெற்று வரும் சில சம்பவங்கள் தொடர்ந்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்தில் ஈழ இனப்படுகொலையின் நினைவேந்தல் நாள் அனுஸ்டிக்கப்படுமா என்கிற சந்தேகம் வலுக்கின்றது.

கடந்த இரண்டு வருடங்களாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்தில் நினைவேந்தல் ஏற்பாடுகள் நடக்கின்றபோது, அயலில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தை சேர்ந்த சிலரால், இந்த நினைவேந்தலை உரித்துகொண்டாடுகின்ற நிலைமைகள் அவதானிக்கப்பட்டது. உண்மையில் கடந்த 2013ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்காலில் குறித்த தேவாலயத்தின் முன்றலிலேயே ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. அப்போது மிகுந்த பாதுகாப்பு கெடுபிடிகள் இருந்தமையினால், தேவாலயத்தில் இடம்பெறும் கூட்டுப் பிரார்த்தனை போன்று அந்த நினைவேந்தல் ஆரம்பமானது. மிகச் சொற்பளவிலான மக்களே அதில் கலந்துகொண்டுமிருந்தனர். நினைவேந்தல் நிறைவுற்ற கையோடு அந்தப் பகுதியில் திருப்பணிகளில் ஈடுபட்டிருந்த அருட்தந்தையர் ஒருவர், தேவாலயத்திற்கு வெளியில் இனப்படுகொலையை நினைவுறுத்தும் வகையில் சிலையொன்றையும், முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களது பெயர்கள் பொறித்த கருங்கற்களையும் சிறியளவில் அமைத்தார். அது பெரியளவில் வளர்ச்சிபெற வேண்டும் என்கிற எதிர்பார்ப்பிலேயே அவர் அங்கு அதனை அமைத்தார். ஆனால் அதனைத் தொடர்ந்து புலனாய்வுத் தரப்பினால் அவருக்கும், அவர் சார்ந்த மேலிடத்திற்கும் கொடுக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக அந்தப் பணிகள் அப்படியே கைவிடப்பட்டன. அருட்தந்தையும் இடமாற்றப்பட்டார். அவரால் அமைக்கப்பட்ட நினைவுச்சிலையும், கொல்லப்பட்டவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கருங்கற்களும் இப்போதும் அந்தப் பகுதியில் சிதைவடைந்த நிலையில் இருப்பதை காணலாம்.

அதற்கு அடுத்து வந்த ஆண்டுகளில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி நிலவியது. அந்தக் காலகட்டத்தில் முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நடத்துவதற்கு மக்கள் அனுமதிக்கப்பட்டார்கள். பாதுகாப்பு கெடுபிடிகள், விசாரணைகள், கண்காணிப்புக்கு மத்தியிலும், இந்து, கிறிஸ்தவ சமயத் தலைவர்களை முன்னிறுத்தி இந்நினைவேந்தல் நிகழ்வானது, ஒவ்வொரு வருடமும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்த நினைவேந்தல் வளாகத்தில் கடந்த 2015ஆம் ஆண்டு ஒரு நினைவுத் தூபி அமைக்கப்பட்டபோதிலும், 2017ஆம் ஆண்டில் அது இனந்தெரியாத நபர்களினால் சேதப்பட்டது.

இந்நினைவேந்தல் வளாகத்தை சீர்படுத்தவும், வேலி அமைக்கவும் கடந்த காலங்களில் சிலர் முயற்சி செய்த போதும், அந்நினைவேந்தல் வளாகக் காணியானது கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு உரித்தானதாகக் காணப்படுகின்ற படியால், பிரதேச சபையின் அனுமதியின்றி அங்கு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை. அதற்காக நடவடிக்கை எடுத்தவர்களையும் புலனாய்வாளர்கள் விசாரணைக்குட்படுத்திய சம்பவங்களும் கடந்த காலத்தில் இடம்பெற்றன. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகக் காணியின் உரித்தாளர்களாக இருக்கின்ற கரைதுறைப்பற்று பிரதேச சபையானது முழுக்கமுழுக்கத் தமிழ் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தபோதிலும், இதுவரையில் எதுவித நடவடிக்கைளும் முன்னெடுக்கவில்லை. இந்நிலையில் கடந்த வருடம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகக் காணியினை நில அளவைத் திணைக்களம் சத்தம்சந்தடியின்றி அளவீடு செய்திருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி கூறிவருகின்ற போரில் கொல்லப்பட்டவர்களுக்கான பொது நினைவேந்தல் தூபி அமைப்பிற்கான இடமாக இது மாற்றப்படலாம் என்கிற சந்தேகத்தினையும், நினைவேந்தல் நிகழ்வுகளோடு சம்பந்தப்பட்டவர்கள் வெளியிட்டுள்ளனர்.

கடந்த காலத்தில் வடமாகாண சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியிலிருந்த போது முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி எழுப்பப்படும் எனக் கூறியிருந்தது. அதன் பின்னர் முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அவர்களும் முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் மையம் அமைக்கப்படும் எனக்கூறியிருந்தார். ஆயினும் இதுவரையில் எந்த அரசியல்வாதிகளும், அரசியல் தரப்புக்களும் முள்ளிவாய்க்கால் வளாகத்தில் ஒரு கல்லைத்தானும் தூக்கிப்போடவில்லை.

இந்நிலையில் இவ்வருடம் இடம்பெறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கிறிஸ்தவர்களே நடத்தவேண்டும் எனவும், நினைவேந்தல் வளாகம் அமைந்துள்ள பகுதியில் அதிகளவில் கிறிஸ்தவர்களே வாழுகின்றமையால், அதனை நடத்தவேண்டிய பொறுப்பு கிறிஸ்தவர்களுக்கே உண்டு எனவும் அப்பகுதி மக்கள் நம்பவைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த வாதங்கள் கடந்த மூன்று வருடங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றுவதைப்போல சிவசேனை அமைப்பும் இதற்குள் நுழைந்து, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடக்கின்ற சமநேரத்தில், கப்பலடி பகுதியில் இறந்த ஆத்மாக்களுக்கு சாந்தி கொடுக்கும் நிகழ்வொன்றை 2022ஆம் ஆண்டிலிருந்து நடத்தி வருகின்றது. ஓர் இனத்திற்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை நினைவு நாளை, அது தொடர்பான நினைவேந்தலை மத ரீதியான நிகழ்வாக மாற்றுவதற்கு இரு மதப்பிரிவினரும் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டு வருகின்றனர். இந்த நிலைமைகளை மேலும் மோசமடையச் செய்யும் விதத்தில் இம்முறை நினைவேந்தலை மேற்கொள்வது தொடர்பில் கிறிஸ்தவ மதத்தினர் முடிவுகளை எடுத்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

ஈழ இனப்படுகொலையின் சாட்சியமாக இருப்பது முள்ளிவாய்க்கால் நிலமும், அங்கு வருடந்தோறும் மே18 இல் மேற்கொள்ளப்படும் நினைவேந்தலும் மட்டும்தான். நினைவேந்தலையும் கூட மக்கள் அங்கு கூடி அழுவதற்கானதாக மட்டுப்படுத்தி வைததிருக்கின்றனர். கூட்டு மதத்தினரின் இணைவால் வெளியிடப்படும் அறிக்கையைத் தாண்டி இனப்படுகொலைக்கான நீதி கோருவதற்கான எந்தச் செயற்பாடுகளும் அங்கு மேற்கொள்ளப்படுவதில்லை. இனப்படுகொலை குறித்த நீதி கோரலுக்கான கூட்டு எழுச்சி இடமாக அது மாற்றப்பட வேண்டும். அங்கு மிகப் பிரம்மாண்டமான இனப்படுகொலை ஆவணக்காப்பகம் அமைதல் வேண்டும். அது காலம் தோறும் அங்கு இடம்பெற்ற ஈழ இனப்படுகொலையை நினைவுபடுத்த வேண்டும். இப்படியாக பல எதிர்பார்ப்புகளும், நம்பிக்கைகளும் அந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்தை முன்வைத்துப் பேசப்பட்டு வருகின்ற நிலையில் அந்நிலத்தை நடக்கும் நினைவேந்தல் நிகழ்வை மத சார்பான வழிபாட்டோடு மட்டுப்படுத்த முயற்சிப்பதும்கூட இன்னொரு அநீதியே ஆகும்.

# அவுஸ்திரேலியாவின் புதிய அமைச்சரவை

## அமைச்சர்கள்



Anthony Albanese MP- Prime Minister

Richard Marles MP Deputy Prime Minister

Anika Wells MP Minister for Communications

Amanda Rishworth MP Minister for Employment and Workplace Relations

Catherine King MP Minister for Infrastructure, Transport, Regional Development and Local Government

Chris Bowen MP Minister for Climate Change and Energy

Clare O'Neil MP Minister for Housing



Dr Anne Aly MP Minister for Small Business

Dr Jim Chalmers MP Treasurer

Jason Clare MP Minister for Education

Julie Collins MP Minister for Agriculture, Fisheries and Forestry

Madeleine King MP Minister for Resources

Mark Butler MP Minister for Health and Ageing

Michelle Rowland MP Attorney-General

Pat Conroy MP Minister for Defence Industry



Senator Don Farrell Minister for Trade and Tourism

Senator Katy Gallagher Minister for Finance

Senator Malarndirri McCarthy Minister for Indigenous Australians

Senator Murray Watt Minister for the Environment and Water

Senator Penny Wong Minister for Foreign Affairs

Senator Tim Ayres Minister for Industry and Innovation

Tanya Plibersek MP Minister for Social Services

Tony Burke MP Minister for Home Affairs

## பிரதி அமைச்சர்கள்



Dr Andrew Charlton MP Cabinet Secretary

Dr Andrew Leigh MP Assistant Minister for Productivity, Competition, Charities and Treasury

Emma McBride MP Assistant Minister for Mental Health and Suicide Prevention Assistant Minister for Rural and Regional Health

Ged Kearney MP Assistant Minister for Social Services

Josh Wilson MP Assistant Minister for Climate Change and Energy

Julian Hill MP Assistant Minister for Citizenship, Customs and Multicultural Affairs Assistant Minister for International Education



Matt Thistlethwaite MP Assistant Minister for Immigration

Patrick Gorman MP Assistant Minister to the Prime Minister


Peter Khalil MP Assistant Minister for Defence

Rebecca White Assistant Minister for Health and Aged Care

Senator Anthony Chisholm Assistant Minister for Resources

Senator Nita Green Assistant Minister for Northern Australia

## ஏனைய அமைச்சர்கள்



Andrew Giles MP Minister for Skills and Training

Dr Daniel Mulino MP Assistant Treasurer

Kristy McBain MP Minister for Regional Development, Local Government and Territories

Matt Keogh MP Minister for Veterans' Affairs

Sam Rae MP Minister for Aged Care and Seniors

Senator Dr Jess Walsh Minister for Early Childhood Education

Senator Jenny McAllister Minister for the National Disability Insurance Scheme


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices & Things Where quality meets community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com



# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

வாழ்வு பெற்ற வல்லி சோழ பாண்டிய இளவரசி மாருதப்புரவீகவல்லியின் மாவை ஆதீனப் பேரரசு
திருவருள் மிகு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

## மகோற்சவப் பெருவிழா (பிரம்மோற்சவம்)
## அழைப்பிதழ்

### விசுவாவசு வருடம் 2025ம் ஆண்டு

மெய்யன்பர்ளே!

சித்விலாச சம்புரோக்ஷன மஹாகும்பாபிஷேக வைபவம் நிறைவு பெற்று ஆரம்பமுதலாக விசுவாவசு வருடம் ஆனி மாதம் 16ம் நாள் 30.06.2025 திங்கட்கிழமை புதிதாக அமையப்பெற்ற வெள்ளிக் கொடிஸ்தம்பத்தில் கொடியேற்றும் வைபவம் ஆரம்பமாகி தொடர்ந்து தினமும் காலை / மாலை 03 காலத் திருவிழா நடைபெறும். இத்தருணம் பொதுமக்கள் அனைவரும் குடும்ப சகிதம் இனசன பந்துக்களுடன் சுற்றும் சூழ ஆசாரசீலர்களாய் மாவைக்கந்தன் ஆலயத்திற்கு வருகை தந்து நடைபெறும் விழாக்களில் கலந்து கொண்டு தங்களது நேர்த்திக்கடன்களை பூர்த்தி செய்து மாவைக் கந்தனைப் போற்றிப் பணிந்து குடும்பத்துடன் தாங்கள் விரும்பிய நற்பல பேறுகளும் பெற்று இன்புற்று சுகமாக வாழ வேண்டுமாய் வாழ்த்தி ஆசீர்வதித்து இத்தால் அனைவரையும் மாவை ஆதீனப்பேரரசுவின் ஆதீனகர்த்தா அன்புடன் அழைக்கின்றேன்.

### தினப்படி பூஜை நேரங்கள் விசேடகாலங்களில் பூஜை நேரங்கள் மாற்றப்படும்

| | | | |
|---|---|---|---|
| காலை | :- | 5.00 மணி | உஷத்கால பூஜை |
| காலை | :- | 6.00 மணி | 108 சங்காபிஷேகம் |
| காலை | :- | 7.30 மணி | காலைச் சந்திப் பூஜை |
| காலை | :- | 8.30 மணி | ஸ்தம்பபூஜை |
| காலை | :- | 9.30 மணி | சண்முகார்ச்சனை |
| காலை | :- | 10.00 மணி | வசந்தமண்டப பூஜை, திருவிழா |
| நண்பகல் | :- | 12.30 மணி | உச்சிக்கால பூஜை |

| | | | |
|---|---|---|---|
| மாலை | :- | 4.30 மணி | 108 சங்காபிஷேகம் |
| மாலை | :- | 6.00 மணி | சாயரட்சைபூஜை |
| மாலை | :- | 7.00 மணி | ஸ்தம்ப பூஜை |
| இரவு | :- | 8.00 மணி | இரண்டாங்கால பூஜை |
| | | | வசந்தமண்டப பூஜை |
| | | | திருவிழா |
| இரவு | :- | 10.30 மணி | அர்த்தசாமப் பூஜை |

### நிகழ்ச்சி நிரல்

| | | | | |
|---|---|---|---|---|
| 27.06.2025 | வெள்ளிக்கிழமை | கொடிப்புடவை ஊர்வலம் | மாலை | 4:30 மணி |
| 27.06.2025 | வெள்ளிக்கிழமை | பைரவர் மடை | மாலை | 5.00 மணி |
| 28.06.2025 | சனிக்கிழமை | கணபதிஹோமம் | மாலை | 5.00 மணி |
| 30.06 2025 | திங்கட்கிழமை | கொடியேற்றம் | அதிகாலை | 4:30 மணி முதல் 10.00 மணி வரை பூர்வாங்கம் 10.15 மணிக்கு வசந்தமண்டப பூஜை, நண்பகல் 12.00 கொடியேற்றம் |
| 04.07.2015 | வெள்ளிக்கிழமை | திருநடனம் | மாலை | 6.30 மணிக்கு மேல் |
| 09.07.2025 | புதன்கிழமை | மஞ்சம் | மாலை | 6.00 மணிக்கு மேல் |
| 14.07.2025 | திங்கட்கிழமை | கைலாச வாகனம் | மாலை | 6.00 மணிக்கு மேல் |
| 20.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | திருக்கார்த்திகை | காலை | 5.00 மணி முதல் இரவு 11.30 மணி வரை |
| 21.07.2025 | திங்கட்கிழமை | வேட்டைத்திருவிழா | மாலை | 2.30 மணி முதல் |
| 22.07.2025 | செவ்வாய்க்கிழமை | பெரிய சப்பறம் | மாலை | 5.00 மணி முதல் |
| 23.07.2025 | புதன்கிழமை | பஞ்சரதபவனி (தேர்) | அதிகாலை | 2.45 மணி முதல் பூர்வாங்கம் வசந்தமண்டப பூஜை |
| | | | காலை | 7.20 தேர்பவனி காலை 9.36 |
| 24.07.2025 | வியாழக்கிழமை | தீர்த்தோற்சவம் | அதிகாலை | 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கீரிமலை |
| 24.07.2025 | வியாழக்கிழமை | கொடியிறக்கம் | இரவு | 8.30 மணி முதல் 11.52 வரை |
| 25.07.2025 | வெள்ளிக்கிழமை | மாம்பழத்திருவிழா | மாலை | 4.00 மணி முதல் |
| 26.07.2025 | சனிக்கிழமை | கப்பல் திருவிழா | மாலை | 4.00 மணி முதல் காங்கேசன் துறை இந்து மஹா சமுத்திர தப்போற்சவம் |
| 27.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | பூங்காவனத்திருவிழா | மாலை | 4.00 மணி முதல் |
| 28.07.2025 | திங்கட்கிழமை | பிராயசித்த அபிஷேகம் | மாலை | 5.00 மணி முதல் |
| 29.07.2025 | செவ்வாய்க்கிழமை | பைரவர்மடை | மாலை | 5.00 முதல் |
| 30.07.2025 | புதன்கிழமை | கணபதிஹோமம் | காலை | 7.00 மணி முதல் |

அனைவரும் வருக வருக ஆனந்தம் பெறுக
மாவைக் கந்தா போற்றி போற்றி நின்பாதம் சரணம்

இங்ஙனம்
மாவைக்கந்தன் சேவையில்
மஹாராஜஸ்ரீ து.ஷ இரத்தினசபாபதிக்குருக்கள்
மாவை ஆதினப் பேரரசு
ஆதீன கர்த்தா
மாவை ஆதினம்
மாவிட்டபுரம்

A/C இலக்கம் 117020042437 H.N.B சுன்னாகம் கிளை

0094(0)212243334
0094(0)778302573
0094(0)771042257
www.mavaikandan.com
mavaikandan@yahoo.com
social media : MAVAIKANDAN

# காரைதீவு 1985: இலங்கையின் இனப்படுகொலையின் நிழலில் மறக்கப்பட்ட தமிழர் பேரழிவு

● சீலன் ராசதுரை

ஏப்ரல் 12, 1985 .

காலைப்பொழுது அமைதியாக விடிந்தது.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் கரையோரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய தமிழ்க் கிராமமான காரைதீவை ஒளிக்கதிர்களுடன் பயங்கரமும் சூழ்ந்து கொண்டது. தமிழ்ப் புத்தாண்டை கொண்டாடுவதற்கான தயார்படுத்தல்களில் கிராமவாசிகள் இருந்த வேளை ஆயுதமேந்திய குழுவினர் கிராமத்துக்குள் நுழைந்தனர். இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப் படைகளின் ஆதரவுடன் இயங்கி வந்த அந்தக்குழுவில் பெரும்பாலும் முஸ்லிம் ஆண்களே உள்ளடங்கியிருந்தனர். இரத்தத்தை உறைய வைக்கும் படுகொலைகளை அந்தக்குழு மேற்கொண்டது (Ismail, 1985; Hoole, 2014). கிட்டத்தட்ட 40 ஈழத்தமிழர்கள் மூன்று நாட்கள் நடத்தப்பட்ட வெறியாட்டத்தில் கொல்லப்பட்டனர். வாள் வெட்டுக்கள், துப்பாக்கிச் சூடு மற்றும் உயிருடன் எரித்தல் மூலமாக இக்கொலைகள் முன்னெடுக்கப்பட்டன. 5,000க்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன், தமிழர்களின் கோயில்களின் புனிதத் தன்மைக்கு ஊறு விளைவிக்கப்பட்டது மற்றும் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர் (UTHR அறிக்கை).

40 ஆண்டுகள் கடந்தும் தமிழர்களுக்கு நேர்ந்த இந்தப் பேரழிவு இன்னும் அதற்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாத நிலையே நிலவுகின்றது, அரசை மையமாகக் கொண்ட, யுத்தத்தைப் பற்றிய கதைகூறல்களிலும் இவ்விடயம் உள்வாங்கப்படவில்லை. ஆயினும், தமிழர்களைப் பொறுத்த வரை காலனித்துவத்துக்கு பின்னரான வரலாற்றுப் பாதையை தீர்மானிக்கும் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு வழங்கப்படும் தண்டனை விலக்கின் இன்னொரு வலிமிகுந்த அடையாளமாகவே இது உள்ளது. குறித்த தினம் வரை, தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்களால் முன்னெடுக்கப்பட்ட மிகப்பெரிய வன்முறை நிகழ்வாக அது அமைந்தது. அடுத்து வந்த பல தசாப்தங்களுக்கு சமூகங்களுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட இந்த வன்முறையே வழிவகுத்தது. வன்முறைக்கு வன்முறையே தீர்வு என்ற உணர்வை இது சமூகங்கள் மத்தியில் ஏற்படுத்தியதுடன் அதனைத் தொடர்ந்த வாரங்கள், மாதங்கள் மற்றும் வருடங்களில் இடம் பெற்ற வன்முறைகளுக்கு கால்கோளாக அது மாறியது.

### காரைதீவு வன்முறைக்கான வழித்தடம்: தமிழர் விரோத வன்முறையின் வேர்கள்

காரைதீவு வன்முறை என்பது ஒரு தனியான வன்முறைச் சம்பவம் அல்ல. தமிழ்த் தேசியவாத போராட்டத்தின் மீது வடக்கு கிழக்கில் வாழும் பல முஸ்லிம்கள் காட்டிய அனுதாபம் இலங்கை அரசாங்கத்துக்கு பதற்றத்தை விளைவிக்கும் விடயமாகக் காணப்பட்டது. எனவே, இவ்விரண்டு சமூகங்கள் இடையே விரிசலைக் கொண்டு வரும் தேவை அரசாங்கத்துக்கு எழுந்தது. "கிழக்கு மாகாணத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் வளர்ந்து வரும் ஒற்றுமை மற்றும் பாதுகாப்புப் படைகள் மீது தமிழ் மற்றும் முஸ்லிம் போராளிகளின் சமீபத்திய பல வெற்றிகரமான தாக்குதல்களின் பின்னணியில்" வன்முறை ஏற்பாடு செய்யப்பட்டதாக தமிழ் ரைம்ஸ் (ஏப்ரல் 1985) அறிக்கையிட்டது. அந்தக்காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடன் உறவுகளை மீள உருவாக்கிய விடயம் முஸ்லிம்கள் மத்தியில் எதிர்ப்பு அலைகளை உருவாக்கியது. அதே வேளை, தமிழ் ஆயுதக் குழுக்கள் வெளிப்படையான ஸியோனிஸ எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தன. இந்த இரண்டு சமூகங்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் முன்னுரிமையான விடயமாக இருந்தது, குறிப்பாக கிழக்கில் இந்தத் தேவை மிகவும் அவசியமானதாக அமைந்திருந்தது.

வடக்கு-கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையான சகவாழ்வு வரலாற்று ரீதியானதாக அமைந்திருந்தது, இவ்விரு சமூகங்களும் பகிரப்பட ஒரு மொழியால் பிணைக்கப்பட்டிருந்தன. சிங்கள-பௌத்த பேரினவாதம் எழுச்சி பெற்ற வேளை, தமிழர்களைப் போன்று தனி நாட்டுக்காக போரிடாத முஸ்லிம்கள் நாடு முழுவதும் சிறுபான்மைப் படுத்தப்பட்டவர்களாகக் காணப்பட்டனர், தமிழர்கள் தமது தாயகமாகக் கோரும் அதே நிலத்தை தமக்குரியது எனக் கோரும் சிங்களவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டுக்குள் முஸ்லிம்கள் அதிகரித்த அளவில் சிக்கிக் கொண்டனர். மறுபுறத்தில், தமிழர் போராட்டத்துக்கு கிடைத்த முஸ்லிம் ஆதரவை முயற்சியின்றிக் கிடைத்த வரப்பிரசாதமாக தமிழ்த் தலைமைகளும் பயன்படுத்திக் கொண்டன. சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கை அரசாங்கங்கள் சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தை ஒன்று திரட்டுவதை நோக்கமாகக் கொண்ட பேரினவாதக் கொள்கைகளை பின்பற்றி வந்தன. இதில் நிலக் குடியேற்றத் திட்டங்களும் உள்ளடங்கியிருந்தன, இது தமிழ்ப் பெரும்பான்மை பிரதேசங்களின் சனத்தொகைப் பிரிவுகளில் மாற்றங்கள் உருவாகக் காரணமாக அமைந்தது. அதே சமயம், தமிழர்கள் மற்றும் சிங்களவர்களுக்கு இடையே ஒரு சாத்தியமான அரசியல் இடை வலயமாக முஸ்லிம் சமூகத்தை இலங்கை அரசு அடையாளம் கண்டது. அரச ஆதரவைப் பெற்ற இந்த சமூகப் பிளவு உள்ளூர் சமூகங்கள் மத்தியில் பதற்றங்களை அதிகரித்ததுடன் அதிக வன்முறை வடிவத்தைப் பிரயோகிக்கவும் தொடங்கியது.




காத்தான்குடி, ஏறாவூர், கல்முனை போன்ற பிரதேசங்களில் நிலம், சந்தைகள் மற்றும் உள்ளூர் அதிகாரம் தொடர்பான பதற்றங்கள் அதிகரிக்க ஆரம்பித்தன. சில முஸ்லிம் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆளும் சிங்கள அரசியல் கட்சிகளுடன் கைகோர்த்து, தமிழ்ப் போராளிகளிடம் இருந்து "சுய பாதுகாப்பு" என்ற போர்வையில் துணை இராணுவக் குழுக்களை உருவாக்க அரசுக்கு உதவினர்.

அரச வன்முறைக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற போராளிக் குழுக்கள் செயற்பட ஆரம்பித்த வேளை, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான முஸ்லிம் இளைஞர்களும் தமிழர் போராட்டத்தில் இணைந்தனர். அதே சமயம் அரசு சத்தமின்றி முஸ்லிம் ஊர்காவல் படைகளுக்கு ஆயுதங்களை வழங்கியது. இந்த ஊர்காவல் படைக்கு இராணுவப் பயிற்சி, ஆயுதங்கள், மற்றும் அரசியல் பாதுகாப்பு என்பன பிரித்தானியா மற்றும் இஸ்ரேலால் பயிற்றுவிக்கப்பட்ட விசேட அதிரடிப் படையினரால் (STF) வழங்கப்பட்டன. அரசு தெளிவான மூலோபாயம் ஒன்றைக் கொண்டிருந்தது: நேரடி இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் அனுதாபம் வழங்கும் பொதுமக்களுக்கு எதிரான பழிவாங்கல் மற்றும் முஸ்லிம் சமூகம் வழங்கும் ஆதரவை இல்லாதொழித்தல் என்பவற்றின் மூலம் தமிழர் போராட்டத்தை பலவீனப்படுத்துவதே அந்த மூலோபாயம்.

வடக்கு கிழக்கில் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதில் அரசாங்கம் கொண்டிருந்த வகிபாகத்தை புரிந்து கொள்ளாமல் இந்த வன்முறைப் போக்கை விளங்கிக்கொள்ள முடியாது. முஸ்லிம் ஊர்காவல் படைகளுக்கு ஆயுதம் வழங்கியமை போராட்டத்துக்கு எதிரான பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாகக் காணப்பட்டது. இதன் நோக்கம் தமிழ்ப் போராளிகளை எதிர்ப்பது மாத்திரமல்லாமல் கிழக்கில் தமிழர்களின் அரசியல் பலத்தை சிதைப்பதுமாகவே இருந்தது. அரச வன்முறையால் பல முஸ்லிம்களும் பாதிக்கப்பட்ட அதேவேளை, சில தமிழ் மேட்டுக்குடிகள் மற்றும் ஆயுதக் குழுக்களைப் போன்று முஸ்லிம் மேட்டுக்குடிகள் மற்றும் ஆயுதமேந்திய செயற்பாட்டாளர்களும் தமிழர் எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் தீவிர பங்கேற்பை வழங்கியிருந்தனர்.

### காரைதீவுப் படுகொலை

படுகொலைகள் இடம்பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்களைத் தூண்டும் துண்டுப் பிரசுரங்கள் இலங்கை விமானப்படையின் உலங்கு வானூர்திகள் மூலமாக பகிரப்பட்டன. தமிழ் டைம்ஸ் (மே 1985) ஊடகத்தின் தகவல்களின்படி, முஸ்லிம்கள் மீதான 'பயங்கரவாத' தாக்குதல்கள் மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களிடம் இருந்து கப்பம் கோரல் சம்பவங்கள் தொடர்பான கட்டுக்கதைகள் இந்தத் துண்டுப் பிரசுரங்களில் காணப்பட்டன. உணர்வுகளைத் தூண்டுவதற்காக ஹர்த்தால்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன, அரச ஊடகங்களின் பரவலான பரப்புரைகள் மூலம் உணர்வுகள் மேலும் தூண்டப்பட்டன.

பெரும்பாலான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முன்னர், முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்களை பிளவுபடுத்துவதற்கான முயற்சிகள் நடப்பதாக கிண்ணியாவை பிரதிநிதித்துவப்படுத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.ஏ. மஜீத் எச்சரித்திருந்தார். ஏப்ரல் 12, 1985 அன்று உரையாற்றிய அவர் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்: "தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர். சில தீய சக்திகளும் சுயநலக் கட்சிகளும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் வன்முறை மோதல்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றன என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே முஸ்லிம்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் இடையே ஒரு வன்முறை மோதலை உருவாக்க சில போலி அரசியல்வாதிகள் தீவிரமாக முயற்சித்து வருகின்றனர், அது உயிரிழப்பு மற்றும் சொத்துச் சேதங்களை மாத்திரமே ஏற்படுத்தும். இத்தகைய ஒரு மோதல் முஸ்லிம்களின் நிலையை மேலும் பலவீனப்படுத்தும். தமிழர்கள் மீது பழி சுமத்துவதற்குப் பதிலாக இந்த அரசியல்வாதிகளின் நோக்கங்களை நாம் பார்க்க வேண்டும்."

இவ்வாறான வேண்டுகோள்களுக்கு மத்தியிலும், ஏப்ரல் 12 ஆம் திகதி காலை தமிழர்களுக்கு எதிரான வன்முறை வெடித்தது. பல முஸ்லிம் இளைஞர்கள் அரச அதிகாரிகளின் உதவியுடன் பஸ்களில் ஏற்றப்பட்டனர், அவர்களிடம் இராணுவத்தால் வழங்கப்பட்ட துப்பாக்கிகள், கத்திகள் மற்றும் பெற்றோல் குண்டுகள் இருந்தன.

படுகொலைகள் பற்றி வெளிவந்த ஹோம் ஃபோர் ஹியூமட் ரைட்ஸ் அறிக்கையின் ஒரு பகுதி இந்த வன்முறை எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்ற விபரங்களை வழங்குகின்றது:

"12 ஆம் திகதி காலை கல்முனையில் இருந்து காரைதீவுக்கு மாளிகைக்காடு ஊடாக பயணித்த மக்கள் , ஜிஹாத் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் மொஸாட்டினால் பயிற்றுவிக்கப்பட்ட விசேட அதிரடிப்படையினரால் இடை மறிக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டனர். தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் பலத்த காயமடைந்தனர். இருப்பினும், அவர்களால் மரணத்திலிருந்து தப்பிக்க முடிந்தது. தாக்குதலுக்கு உள்ளான ஒரு நபர் அதனை பின்வருமாறு விபரித்தார்: 'புத்தாண்டு விருந்துகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அதிகளவான பணத்தை நாங்கள் கொண்டு சென்றிருந்தோம். மாளிகைக்காடு சந்தியை நெருங்கும் வேளை ஒரு சில பொலிஸ் வாகனங்கள் வீதியின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை எம்மால் காண முடிந்தது. சில பொலிஸ் அதிகாரிகளும் இராணுவ உடை அணிந்த சில நபர்களும் அங்கிருந்தனர். பொலிஸ் அதிகாரிகள் நின்ற இடத்துக்கு சற்றுத் தூரமாக அதிக எண்ணிக்கையான நபர்கள் இருந்தனர், அவர்கள் அனைவரும் அப்பிரதேசத்துக்கு அந்நியமானவர்களாக இருந்தனர். நாம் அவர்களுக்கு அருகில் சென்ற போது, அவர்கள் முஸ்லிம் இளைஞர்கள் என எம்மால் அறிய முடிந்தது, அவர்களின் ஆடை மற்றும் தாடி என்பவற்றின் மூலம் அவர்களை முஸ்லிம்கள் என அடையாளம் காண முடிந்தது. அந்த இளைஞர்கள் மூர்க்கமானவர்களாகத் தோன்றினர்.'

'பொலிஸ் அதிகாரிகள், விசேட அதிரடிப்படையினர் (களுவாஞ்சிக்குடி) மற்றும் மாளிகைக்காட்டைச் சேராத அந்நியர்கள் அங்கு இருந்தது எமக்கு அசௌகரியத்தையோ பதற்றத்தையோ ஏற்படுத்தவில்லை. முஸ்லிம் அடிப்படைவாதிகள் மற்றும் ஏனையோருக்கு இடையே ஏற்படச் சாத்தியமான ஏதாவது அமைதியின்மையை தடுப்பதற்காக பொலிஸார் அங்கிருப்பதாக நான் நினைத்தேன். மாளிகைக்காட்டில் வசிக்கும் எமது முஸ்லிம் அயலவர்களுடன் எமக்கு எந்த வித முரண்பாடும் இல்லாததால், அவ்விடத்தில் நாம் பாதுகாப்பாகவே உணர்ந்தோம். நாம் எமது பயணத்தைத் தொடர்ந்தோம். நாங்கள் சந்தியை அடைந்தபோது, அச்சுறுத்தும் தோற்றம் கொண்டபல இளைஞர்கள் எங்களை நோக்கி விரைந்து வந்து பொல்லுகளால் எம்மைத் தாக்கத் தொடங்கினர் தாக்குதல் நடத்தியவர்களைத் தவிர வேறு நபர்களும் அங்கிருந்தனர், அவர்களிடம் பயங்கரமான ஆயுதங்கள் காணப்பட்டன. அவர்கள் தாக்குதலைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.'

'எதிர்பாராத தாக்குதல் காரணமாக எமது புலன்கள் அச்சத்தில் உறைந்திருந்தன. நாங்கள் பணத்தை இழந்தோம், காயமடைந்ததுடன் மன வேதனையையும் அனுபவித்தோம். இது இளைஞர்களின் ஒரு மோசமான நடத்தை. சட்டரீதியாக வீதியைப் பயன்படுத்திய பொதுமக்கள் மீது சட்ட அமுலாக்க அதிகார தரப்புகளின் பிரசன்னத்தில் நடந்த இந்தத் தாக்குதல் ஒரு கொடுமையான விடயமாகும். தாக்கப்பட்டபோது, தாக்குதல் நடந்த இடத்திற்கு மிக அருகில் இருந்த பொலிஸாரின் கவனத்தை ஈர்க்க நாங்கள் அழுது கூக்குரலிட்டோம்.

எமது கூக்குரலுக்கு பொலிஸாரோ அல்லது விசேட அதிரடிப்படையினரோ பதிலளிக்கவில்லை. இந்த சம்பவத்துக்கு பின்னரான நாட்களில் குறித்த வீதியில் பயணித்த பல தமிழர்கள் கடத்தப்பட்ட நிலையில், எம்மீது தாக்குதல் நடத்தியவர்கள் எம்மைக் கடத்திச் செல்லாதது எமது அதிர்ஷ்டமே ஆகும். தனது சொந்தக் குடிமக்களுடனான பிரச்சினைகளுக்கு ஒரு நீதியான தீர்வை வழங்க முடியாத அரசாங்கம் சமூகங்களுக்கு இடையே வன்முறையை ஊக்குவித்துள்ளது என்ற யதார்த்தம் இங்கு நிறுவப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் உள்ள பூர்வீகத் தமிழர்களைத் தாக்க வேறு இடங்களிலிருந்து குண்டர்கள் கொண்டு வரப்பட்டனர்."

-இப்படி அவர் தன் பயங்கர அனுபவத்தை விவரித்தார்.

பொலிஸாரின் தலையீடுகள் எதுவுமின்றி இந்தக் கொடுமை பல நாட்களுக்கு நீடித்தது, மேலும் கிழக்கு முழுவதும் இந்த வன்முறை பரவலடைந்ததுடன் அது வாரக்கணக்கில் நீடித்தது.

வன்முறை திட்டமிட்டு நடத்தப்பட்டது. தமிழர்களின் வீடுகள் இலக்கு வைக்கப்பட்டு தாக்கப்பட்டன. வீடுகள் எரிக்கப்படுவதற்கு முன்பு சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டன. பெண்கள் தங்கள் வீடுகளிலிருந்து இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர் (Imtiaz and Hoole, 2011). முதியவர்கள் மற்றும் சிறுவர்கள் மீதுகூட எந்தவித இரக்கமும் காட்டப்படவில்லை. உள்ளூர் தமிழர்கள் உதவி பெற முயற்சித்த போதும் எந்த வித உதவியும் வரவில்லை. பொலிஸாரின் பிரசன்னம் இருக்கவில்லை, பாதுகாப்பு படையினர் செயற்படாமல் வேடிக்கை பார்த்தனர்.

வன்முறையின் முடிவில் காரைதீவில் மட்டும் குறைந்தது 40 தமிழர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இருப்பினும், உண்மையான எண்ணிக்கை தெரியாமலேயே உள்ளது. சில உடல்கள் ஒரு போதும் மீட்கப்படவில்லை. ஏனைய உடல்கள் இந்தக்கொடுமை பற்றி வாய்திறக்க மிகவும் அச்சத்துடன் காணப்பட்ட உறவினர்களால் அடையாளமிடப்படாத குழிகளில் புதைக்கப்பட்டன.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, பொலிஸில் பணியாற்றிய தமிழ் அதிகாரிகள் உள்ளிட்ட தமிழர்கள் முஸ்லிம் குழுக்களின் தலைவர்களாகக் கருதப்பட்டவர்களைக் கொன்றனர். போராளிகள் மறைந்திருக்கின்றனர் என சந்தேகிக்கப்படும் இடங்கள் மீது விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்துவர். அதனைத் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வரும் நேரத்துக்கு முன்னரே அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்று விடுவர். இது முஸ்லிம் கிராமவாசிகள் பழிவாங்கல் தாக்குதல்களை எதிர்கொள்ள ஏதுவாக அமையும் (Ismail, 1985).

### வன்முறைகளின் பின்னர்...!

இந்த வன்முறைகள் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணைகள் எவையும் நடத்தப்படவில்லை. அரச ஊடகங்கள் இந்தச் சம்பவத்தை பெரிதாக அறிக்கையிடவில்லை, தெளிவற்ற விதத்தில் "சமூகக் குழப்பங்கள்" எனக் குறிப்பிட்டன. ஒட்டு மொத்த பிரதேசமும் விசேட அதிரடிப்படையின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் வன்முறையுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருந்ததாகவும்' தி ஐலண்ட்' பத்திரிகையில் 'இஸ்மாயில் கற்றி'என்பவர் எழுதியிருந்தார். தமிழர்களுக்கான தாக்குதல்களை இராணுவம் ஏன் தடுக்கவில்லை என ஒரு மூத்த இராணுவ அதிகாரியிடம் பி.பி.ஸி வினவிய போது, அவர் பின்வருமாறு பதிலளித்ததாக அவ்வூடகம் அறிக்கையிட்டிருந்தது: "முஸ்லிம்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு எமக்கு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை". பிரித்தானியாவினால் பயிற்றப்பட்ட விசேட அதிரடிப்படையினர் முஸ்லிம்களுக்கு ஆயுதம் வழங்கி உதவிபுரிந்தது மாத்திரமன்றி, தமிழர்கள் மீது தாக்குதல் நடத்த அவர்களைத் தூண்டியதாகவும் பிரித்தானிய இராஜதந்திரிகள் அந்த நேரத்தில் தெரிவித்திருந்தனர். உயர் ஸ்தானிகராலயத்தின் கூற்றுப்படி தாக்குதல்கள் "வெற்றிகரமானவையாக" அமைந்துள்ளன, ஏனெனில் தமிழ் பிரிவினைவாத குழுக்களுக்கு முஸ்லிம்கள் ஆதரவளிப்பது முன்னர் இருந்ததை விட தற்போது குறைந்த சாத்தியம் மிக்க விடயமாக மாறியுள்ளது (Miller, 2020).

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கறுப்பு ஜூலை காலத்தில் தமிழர்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டுவதில் ஈடுபட்டதாக கருதப்பட்ட கொழும்பை தளமாகக் கொண்ட ஐ.தே.க.வின் அமைச்சரவை அமைச்சர் எம்.எச். முஹம்மது இந்த வன்முறையில் சம்பந்தப்பட்ட முக்கியமான நபர்களில் ஒருவர் . (Imtiaz and Hoole, 2011). ஆயினும், அவரது தமிழ் அமைச்சரவை சகாக்களாக இருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் எஸ். தொண்டமான் , ஐக்கிய தேசியக் கட்சியின் கே.டபிள்யூ. தேவநாயகம் ஆகியோர் இந்த வன்முறைக்கு "வெளியக சக்தியே" காரணம் எனக் குற்றம் சாட்டினர். மேலும், கிழக்கில் நடந்த வன்முறையில் பங்கேற்க கொழும்பில் இருந்து முஸ்லிம்கள் பயணிக்க பஸ்கள் மற்றும் ஜீப்களை ஒழுங்கு செய்ததாகவும் தொண்டமான் கூறியிருந்தார்.

அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்க கூட, தமிழர்கள் மீதான தாக்குதல்களை ஊக்குவித்ததற்காக அரசாங்கத்தை குற்றம் சாட்டினார், "வன்முறையை அடக்க அரசாங்கம் விரும்பவில்லை, அதில் அவர்கள் நன்மையடைகின்றனர்" என அவர் குறிப்பிட்டிருந்தார். மன்னாரில் உள்ள ஒரு பள்ளிவாசலில் வைத்து மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு பழிவாங்கவே முஸ்லிம்கள் வன்முறையில் இறங்கினர் என்ற கூற்றை முன்னாள் பிரதம மந்திரியான ஸ்ரீமாவோ பண்டாரநயக்க நிராகரித்திருந்தார். "பி.எல்.ஓ (PLO) அமைப்பினால் பயிற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் போராளிகள் முஸ்லிம்களை கொல்வார்களா? பள்ளிவாசல்களில் முஸ்லிம்களைக் கொல்வதால் 'பயங்கரவாதிகளால்' எதையாவது அடைந்துகொள்வார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?" என அவர் கூறியதாக இஸ்மாயில் குறிப்பிட்டுள்ளார். 'அவர்கள் எப்போதாவது ஈழத்தை அடைந்தால்...அவர்கள் முஸ்லிம்களுடன் சேர்ந்து வாழ வேண்டும் இந்த ஒட்டுமொத்த பிரச்சினையும் ஒரு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. 'பயங்கரவாதிகள்' ஏன் முஸ்லிம்களைத் தாக்க வேண்டும்? குறிப்பிட்ட அமைச்சர்களுக்கு இதில் தொடர்பிருப்பதாக சிலர் கூறுகின்றனர், மொஸாட் மற்றும் கொமாண்டோக்களுக்கு [STF] இதில் தொடர்பிருப்பதாக வேறு சிலர் கூறுகின்றனர்." என்று ஸ்ரீமாவோ கூறியிருந்தார். அவரின் கட்சியைச் சேர்ந்த பதியுதீட் முஹம்மட் இஸ்ரேல் மீது குற்றம் சுமத்தினார். "முஸ்லிம்களையும் தமிழர்களையும் பிளவுபடுத்துவதற்காக சில வெளியகத் தரப்புகள் இந்த விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர். மொஸாட் மீது எமக்குச் சந்தேகம் உள்ளது. அவர்கள் குழப்பங்களை உருவாக்குபவர்கள். இஸ்ரேலியர்கள் எப்போதும் இஸ்லாத்தின் எதிரிகளாக உள்ளனர். இஸ்லாத்தை சேதப்படுத்த அவர்கள் எப்போதும் பிரச்சினைகளை உருவாக்குவார்கள்" என்று அவர் தெரிவித்தார். (Ismail, 1985)

### 40 ஆண்டுகளுக்குப் பிறகு...!

காரைதீவில் இடம்பெற்ற படுகொலை ஒரு அறியப்படாத அட்டூழியமாக மட்டுமல்லாமல், தமிழ் அரசியல் அதிகாரத்தை அழிப்பதற்காக இலங்கை அரசு எவ்வாறு பிரிவினையை ஆயுதமயமாக்கியது என்பதற்கான அப்பட்டமான அடையாளமாகவும் உள்ளது. இந்த வன்முறை தானாகத் தோன்றியது அல்ல - இது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது, மற்றும் இராணுவத்தின் உதவி, அரச பிரசாரம், ஒத்துழைக்க விரும்பிய தரப்புகள் அத்துடன் சமூகங்களை ஒன்றுக்கொன்று விரோதமாக செயற்பட வைக்கும் நோக்கில் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட கொள்கை என்பவற்றின் மூலம் கட்டவிழ்த்து விடப்பட்டதாகும். கிழக்கில் தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையை உடைக்க வகுப்புவாத தவறுகளைப் பயன்படுத்திய ஒரு பரந்த எதிர்ப்பு எழுச்சி மூலோபாயத்தை காரைதீவுப்படுகொலைகள் வெளிப்படுத்துகின்றன. அதே நேரத்தில் அடுத்த ஆண்டுகளில் இரு தரப்பிலும் கொடூரமான வன்முறைக்கு வழிவகுத்த இன விரோதங்களையும் இந்தப் படுகொலைச் சம்பவம் ஆழப்படுத்துகிறது .

இந்தப் படுகொலை பற்றிய உத்தியோகபூர்வ நினைவேந்தல் இல்லாமல் இருப்பது தற்செயலான நிகழ்வு அல்ல. தமிழ் வன்முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் "நல்லிணக்க" கலாசாரத்தில் வேரூன்றிய அழிப்பு மற்றும் தண்டனையற்ற அதே திட்டத்தின் தொடர்ச்சியாகும். ஆனால் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் காரைதீவு பேரழிவை நினைவுகூர்வது ஒரு துக்கச் செயலை விட மேலானது - இது ஒரு அரசியல் எதிர்ப்புச் நடவடிக்கையாகும். இது முஸ்லிம்களுக்கு எதிரான தமிழர்களின் ஒருதலைப்பட்ச வன்முறைகள் பற்றிக் கூறப்படும் தவறான கதைகளை சவாலுக்கு உட்படுத்துகிறது, மேலும் இழந்த உயிர்களுக்கு மட்டுமல்ல, தொடரும் கட்டமைப்பு வன்முறைக்கும் நீதி கோருகிறது. காரைதீவு போன்ற நிகழ்வுகள் வரலாற்றின் ஓரங்களில் புதைக்கப்படும் வரை, முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பற்றிய அர்த்தபூர்வமான பகுப்பாய்வை மேற்கொள்ள முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த வன்முறையில் ஈடுபட்டவர்கள் தமது சுற்றுப் புறங்களிலேயே வசிக்கின்றனர் என்ற உணர்வு கசப்புணர்வு தொடர்ந்து நிலைத்திருக்க காரணமாக அமையும். இந்த வரலாறு நேர்மையாகவும் வெளிப்படையாகவும் எதிர்கொள்ளப்படும் வரை, இந்த தமிழ் பேசும் சமூகங்களுக்கிடையேயான நீதி மற்றும் நல்லிணக்கம் என்பன எட்டாக்கனியாகவே இருக்கும்.

■

# ஒரு தேசத்தின் மனச்சாட்சியை உலுப்பிய, மாணவியின் தற்கொலை



● மாவை நித்தியானந்தன்

இலங்கையில் இளையோரின் தற்கொலைகள் அடிக்கடி நடக்கின்றன. அண்மையில் கொழும்பில் ஏழாம் மாடியிலிருந்து குதித்து, டில்ஷி அம்சிகா என்ற பாடசாலை மாணவி மரணமடைந்தார். இந்தத் தற்கொலைக்குத் தூண்டுதலாக இருந்த நிகழ்வுகள், பாலியல் துன்புறுத்தலுடன் ஆரம்பித்துள்ளன. இந்த மாணவியின் மரணத்துக்கு யார் யாரெல்லாம் பொறுப்பு என்ற கேள்வி, நாடெங்குமுள்ள பெற்றோர் மத்தியில் அலை மோதிக் கொண்டிருக்கிறது.

இந்த மரணம் பற்றிய தகவல்கள், செய்திகளாகவும், அபிப்பிராயங்களாகவும், வதந்திகளாகவும் குவிந்துள்ளன. டிசம்பர் மாதத்தில் தொடங்கிய பிரச்சினையை அதிகாரிகள், ஏற்ற முறையில் கையாளாததால் தான், ஏப்ரல் 29 திகதித் தற்கொலை நடந்துள்ளது என்பது பலரும் கொண்டுள்ள கருத்து.

இந்த மாணவி படித்த பாடசாலை, பம்பலப்பிட்டியில் உள்ள இந்து மகளிர் கல்லூரி. மாணவியைப் பரிசீலித்த வைத்தியர்கள் காவல் துறைக்குச் செய்த முறைப்பாட்டின் பேரில், கணித ஆசிரியர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார். பாடசாலையைப் பொறுத்தவரை, கதை அத்துடன் முடிந்தது போலாயிற்று. (இலங்கையில் சட்டமும், நீதியும் அமுலாகும் விதம் தெரிந்தது தானே? பணம், அதிகாரம், அரசியல் - இவைதான் நீதியின் ‘காவல் நாய்கள்’). அதிபருக்கோ பாடசாலையின் நற்பெயரும், தனக்கு நட்பான ஆசிரியரும் தான் முக்கியம். பிள்ளை எக்கேடு கெட்டாலென்ன?

ஏற்கனவே பாதிக்கப்பட்ட அம்சிகா, பாடசாலையில் பலவிதமான உளரீதியான அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டார். ஆசிரியத் தொழிலுக்கே அவமானச் சின்னங்களாக இருக்கக்கூடிய பல ஆசிரியர்கள், அரக்கத்தனமாக நடந்துகொண்டனர். கொழும்புத் தமிழ்ப் பெற்றோர் மத்தியில் ஒரு நோய் இருக்கிறது. ஒரு மாணவி பாதிக்கப்பட்டால், தங்கள் தங்கள் பிள்ளைகளைத் தூர விலக்கி, வேலி போட்டுவிடுவார்கள். அந்த மாணவியுடன் பழகவோ, உரையாடவோ கூட விட மாட்டார்கள். இவையெல்லாம் அம்சிகாவை உளரீதியாக வருத்தின. நண்பர்களையும் இழந்து, இயல்பாகவே அவர் மன அழுத்தத்துக்கும் ஆளானார்.

கணித ஆசிரியர் உற்சாகமாகப் பாடம் நடத்த, மாணவி பாடசாலையை விட்டு வெளியேறி இன்னொரு பாடசாலையில் சேர வேண்டியதாயிற்று. குசுகுசுப் பேச்சுக்காரர்களும், பூராயம் தேடுவோரும் அவளை அங்குகூட விட்டு வைக்கவில்லை. இவை எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பு வைத்தாற் போல், அவள் மாலையில் படிக்கச் சென்ற பிரத்தியேகக் கல்வி நிலையத்தின் பொறுப்பாளர் (ஒரு அரசியல்வாதி), எல்லோருக்கும் முன்நிலையில் மரியாதையற்ற வார்த்தைகளைப் பிரயோகித்தது மட்டுமன்றி, இனிமேல் கல்வி நிலையத்துக்கு வரவேண்டாமெனவும் கூறியதாகத் தாயார் தெரிவித்திருக்கிறார். இதுவே அம்சிகாவின் மீது விழுந்த பலமான இறுதி அடி.

மாணவி இறந்த பிறகுதான், மற்றவர்கள் விழித்தெழுந்தார்கள். பாடசாலை முன் மக்கள் அணி திரண்டது. சமூக வலைத் தளங்களில் பூகம்பம் வெடித்தது. பாராளுமன்றத்துக்குள்ளும் கூக்குரல் கேட்டது. இந்தச் சத்தத்தில் தான், அதிகாரிகளின் தூக்கமும் ஒருவாறு கலைந்தது. இடமாற்றமென்றும், வேலை இட நிறுத்தமென்றும், விசாரணை என்றும் பலவித ஆலாபரணங்கள்.

இந்த இழிநிலைக்குக் காரணமென்ன? எங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்க என்ன செய்யலாம்?

ஒன்று: தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. அது முறையாக இயங்குவதை உறுதி செய்ய வேண்டும். (இதற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சரின் மனோபாவமும் மாறவேண்டும்.)

இரண்டு: பாடசாலை அதிபர் என்பது மிக முக்கியமான பொறுப்பு. தகுதி இல்லாதவர்கள், தலைமை வகிக்கத் தெரியாதவர்கள் அகற்றப்பட வேண்டும் (“எல்லாருக்கும் பதவி உயர்வு” என்ற பழைமை வாதத்திலிருந்து விடுபட வேண்டும்.)

மூன்று: பிள்ளைகள் பாதுகாப்பு என்பது ஒரு சில்லறை விடயமல்ல. பிள்ளைகளின் நலனுக்கு, எத்தனையோ திசைகளிலிருந்து, எத்தனையோ விதமான அச்சுறுத்தல்கள் உள்ளன. இலங்கை, முன்னேறிய நாடுகளிலிருந்து படித்தல் வேண்டும். ஒரு முழுமையான பிள்ளைகள் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். வெறுமனே ஒரு அதிகார சபை மட்டும் இருந்து, ஒன்றும் செய்ய முடியாது. முழுமையான தீர்வு அவசியம்.

இறுதியாக ஒன்று. மரணித்த ஒரு அம்சிகாவை மட்டுமே நாம் அறிவோம். எமக்குத் தெரியாமல் மரணித்த அல்லது இன்னும் மரணிக்கப் போகிற, அல்லது மரணிக்காமலே நரகத்துள் வாழ்கிற அம்சிகாக்கள் பல்லாயிரம். இறுதியில், எல்லா அம்சிகாக்களுக்கும் பொறுப்பு, சமூகம் தான்.



# ‘ரூரிஸ்ட் பமிலி’—முழுமையடையாத பயணம்

படகில் ஏறினோம்
படகுகளை விற்று
இங்கே வீடு கிடைப்பதற்குள்
அங்கே நாடு கிடைத்துவிடும்
இராமேசுவரத்தில்
எல்லோரும்
குளித்துக் கரையேறுகிறார்கள்
நாங்கள்
குதித்துக் கரையேறுகிறோம்.

**-கவிஞர் அறிவுமதி**



வெகு நாட்களுக்கு முன்பு ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட The Visitor எனும் ஆங்கிலத்திரைப்படம் பார்த்தேன். அந்த படத்தில் சட்டவிரோதமாக குடியேறிய புலம்பெயர்ந்த அகதிகளுக்கும், அந்த மண்ணில் வாழும் ஒரு வெள்ளையருக்கும் ஏற்படும் இயல்பான அன்பையும், எவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் மிகக்கொடூரமாக நடத்தப்படுகிறார்கள் என்பதையும் மிக நன்றாக காட்டியிருப்பார்கள் . கண்ணீர் சிந்தும் வசனங்களோ , மிகைப்படுத்தப்பட்ட சோகத்தை வரவழைக்கும் காட்சிகளோ இன்றி மிக இயல்பாக செல்லும் ,நமது மனத்தினுள்ளே நுழைந்து நம்மை சில நாட்கள் தொந்தரவு செய்யும் படம். அந்த மாதிரி படங்களையெல்லாம் பார்த்துவிட்டு , Tourist Family எனும் இந்த தமிழ்ப்படத்தில் ட்ரைலரில் இலங்கைத் தமிழ் பேசும் பாத்திரங்களை பார்த்துவிட்டு, இயல்பான திரைப்படத்தை எதிர்பார்த்துச் சென்றேன். ஆனால் மற்றைய தமிழ்ப்படங்களைப் போல் இதுவும் சாதாரணமான மசாலா திரைப்படமாக முடிந்துவிட்டதை எண்ணி வருத்தம் தான்.

இந்தப் படத்தைப் பற்றி பேசுவதற்கு முன்பு நாம் ஈழத் தமிழர்களை எப்படி நடத்துகிறோம் என்பதை என் வாழ்வில் கண்ட அனுபவங்களை இங்கே சொல்லிவிடுகிறேன். அப்பொழுது தான் உண்மைக்கும் ,சினிமாவுக்கும் எவ்வளவு தூரம் என்பது விளங்கும். எங்கள் ஊரில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கென்ற தனி காலனி இருக்கிறது , அதன் பெயர் சிலோன் காலனி. அங்கே நான் சென்றிருக்கிறேன். மக்கள் வாழவே முடியாத ஊருக்கு வெளியில் வெகுதொலைவில் அவர்களுக்கென்றே தனி ஊர் அமைத்துக்கொடுத்திருந்தார்கள். இப்பொழுது அந்தப் பகுதியில் எல்லோரும் ஊடுருவி விட்டார்கள். நானே நேரடியாக பார்த்திருக்கிறேன். ஈழத் தமிழர் வேலைக்கு வந்தால் கூலி மிகவும் குறைவாகவே கொடுப்பார்கள். அது மட்டுமின்றி இப்போது நாம் எப்படி வடக்கன்களை நடத்துகிறோமோ அப்படித்தான் அவர்களையும் மதித்திருக்கிறோம். இப்போது நிலைமை மாறியிருக்குமா என்று தெரியவில்லை.




நான் கல்லூரியில் படிக்கும்போது என்னுடன் ஒரு மாணவன் படித்தான் .அவன் ஈழத்தமிழர் வகையில் அவனுக்கு பொறியியல் படிப்பு கிடைத்ததால் மற்ற மாணவர்கள் அவனை கோட்டா மாணவன் என்று அழைப்பார்கள். அது மட்டுமின்றி அவன் நல்ல மதிப்பெண்கள் இருந்தபோதிலும் கல்லூரியில் நடைபெற்ற எந்த வளாக நேர்காணல்களிலும் கலந்து கொள்ள முடியாத இக்கட்டான நிலைதான். இது தான் நிதர்சன நிலைமை. நான் கூறுவதெல்லாம் நடந்தது ஒரு 25 வருடங்களுக்கு முன்பு. இப்பொழுது நிலைமை எப்படி இருக்கிறதென்று தெரியவில்லை. தெரிந்தவரை பெரியதாய் ஒரு மாற்றமும் இல்லை. இந்தியா குறிப்பாக தமிழகம் வராமல் மற்ற நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள் புண்ணியம் செய்தவர்கள்.

படத்தின் கதைச்சுருக்கம் எல்லாம் முகநூல் திடீர் விமர்சகர்களும், யூரியூப்பில் சுடச்சுட சூறாவளி விமர்சனம் தருபவர்களும் ஏற்கெனவே செய்துவிட்டதால் நான் இந்தப்படம் ஏன் எனக்கு பிடிக்காமல் போனது என்றும், ஒரு நல்ல படமாவதற்கு எவ்வளவோ வாய்ப்பு இருந்தபோதும் ஏன் சறுக்கியது என்பதையும் இங்கே விவாதிக்கலாம் என்றிருக்கிறேன். முதலில் பாத்திரத்தேர்வு - சசிகுமார் ,சிம்ரன் மற்றும் அவர்களின் இரண்டாவது மகனாக வருபவரும் கொஞ்சம் கூட இந்தப் படத்தில் ஒட்டவில்லை. மூத்தமகனாக நடித்தவர் மட்டும் தான் ஓரளவில் ஈழப் பாத்திரத்தோடு ஒன்றியிருப்பதாக இருந்தது. சசிகுமாருக்கு பதில் குரு .சோமசுந்தரத்தைப் பயன்படுத்தியிருக்கலாம். வெகு இயல்பாக பொருந்தியிருப்பர். நமக்கெல்லாம் தெரியும் தானே ,சசிகுமார் அவர்களுக்கு முகத்தில் எந்த உணர்ச்சிகளும் வராதென்று. எல்லா உணர்ச்சிகளுக்கும் ஒரே முகபாவனை அளிப்பவர் அவர்.

இரண்டாவது, இந்தப் படத்தில் எல்லாருக்கும் புரியவேண்டும் என்பதற்காக ஒரு வெகுஜன தமிழ்ச்சினிமா மொழியில் கொஞ்சம் சிலோன் தமிழ் வார்த்தைகளை கலந்துவிட்டு ஈழத்தமிழ் என்று ஜல்லியடித்திருக்கிறார்கள். வெகு செயற்கையாக இருக்கிறது. இயக்குநரும் தயாரிப்பாளரும் படம் வணிக ரீதியில் ஓட வேண்டுமென்பதற்காக ஏகப்பட்ட சமரசங்களைச் செய்திருக்கிறார்கள். படகில் இருந்து வெகு இயல்பாக குதித்து வருகிறார்கள் சசிகுமார் தம்பதிகள். அவர்களைப் பார்த்தால் எங்கோ தீர்த்தயாத்திரை போய்விட்டு ரொம்ப கூலாக வருகிறார்கள் என்று நினைக்கவைக்கிறது. படம் ஆரம்பித்ததிலிருந்து இறுதி வரை அவர்களுக்கு எந்தப் பதற்றமும் இல்லை. அதனால் தான் இந்தப் படத்திற்கு ரூரிஸ்ட் பமிலி என்று பெயர் வைத்தார்களோ என்னவோ தெரியவில்லை.

படம் சோர்வடையாமல் வெகு விரைவாக முடிய வேண்டும், பார்வையாளன் ஒரு நிமிடம் யோசிக்க கூடாது அல்லது அவனது கவனம் கையிலுள்ள செல்பேசிக்கு செல்லக்கூடாது என்பதால் 2.15 மணி நேரம் காமெடி காட்சிகள் வைத்து நகர்த்தியிருக்கிறார்கள். இங்கே எங்கே அய்யா ஈழத்தமிழனின் சோகமும், வலியும், வேதனையும்? சோக ரசம் பிழியவேண்டாம் .ஆனால் இரண்டொரு காட்சிகள் அமைத்திருக்கலாம். செய்யவில்லை. ஒரு ஒரு காட்சியில் மட்டும் ,தர்மதாஸின் (சசிகுமார் ) மூத்தமகன் நிதுசன் தனது கவலையை தெரிவிக்கிறார். அது கூட பிற்பாடு கேலி செய்து பாட்டு பாடி ,நடனம் ஆடி களைந்து விடுகிறார்கள். தர்க்கம் என்பதை நாம் அணுவளவுக்கும் எதிர்பார்க்கக் கூடாது என்பது தமிழ் சினிமாவின் எழுதப்படாத விதி. இந்த படத்திலும் அது வலுவாகக் காப்பாற்றப்பட்டிருக்கிறது. ராமேஸ்வரம் காவல்துறையினர் cctv காணொலி கிடைத்த போதிலும் பல நாட்கள் எடுக்கிறார்கள், சசிகுமார் குடும்பத்தை கண்டடைவதற்கு. பொலிஸ் கமிஷனர் ஏதோ ஒரு வழிப்பறிக் கொள்ளையனைத் தேடி வந்தது போல ஒவ்வொரு வீடு வீடாக சென்று சசிகுமார் குடும்பத்தினரை தேடுகிறார். CCTV யில் சசிகுமார் முகம் தெரிந்தபோதிலும் அவரை அடையாளம் காட்ட ஒரு பொலிஸ்காரரை கூட்டிச் செல்வதன் மூலம் தமிழ்நாடு பொலிஸ் தனது டிப்பார்ட்மெண்ட் தவிர வேறு யாரையும் நம்பாது என்பதை சுட்டிக்காட்டிய இயக்குநருக்கு நன்றி. அநியாயத்திற்கு எல்லோரும் நல்லவர்களாக இருக்கிறார்கள் அல்லது அடிமுட்டாளாக இருக்கிறார்கள். ஒரே ஒருவர் மட்டுமே கெட்டவர். ,அவரும் வடக்கிந்தியாவைச் சேர்ந்தவர். இதன் மூலம் இயக்குநரின் திராவிடப் பற்றை அறிந்துகொள்ள முடிகிறது.ஒரு கட்டத்தில் நாம் ஏதோ விக்ரமன் படம் பார்க்கிறோம் என்ற பிரமை வருவது வெகு இயல்புதான்.

என்னப்பா ,குறைகளே சொல்கிறாயே நிறைகள் இல்லையா என்று கேட்கலாம். கண்டிப்பாக இருக்கிறது. இந்தப் படத்தின் கதைக்களம் மிகப் புதியது. இன்னும் நன்றாக உண்மையைச் சொல்லும் படமாய் எடுத்திருக்கலாமே என்ற ஆதங்கம் தான். இயக்குநர் அபிஷன் ஜீவிந்த் குடிகாரர் கதாபாத்திரத்தில் வருகிறார் ,திடீரென அவர் திருந்தி நல்லவராகி சசிகுமார் அவர்களை புகழ்ந்து தள்ளுகிறார். ஆனால் அவரின் flashback காட்சிகள் வெகுஇயல்பாக இருந்தன. படத்தின் பாடல்கள் எல்லாம் துருத்திக்கொண்டிராமல் இயல்பாக இருப்பது ஒரு ஆறுதல். படத்தின் பலம் எஸ்.ஜே .பாஸ்கர் மற்றும் இளங்கோ குமரவேல் கதாபாத்திரங்கள். இன்னும் நன்றாய் யதார்த்தமாக அமைத்திருந்திருக்கலாம். நந்தா , தெனாலி மற்றும் நளதமயந்தி போன்ற ஏனைய தமிழ் படங்கள் போன்றில்லாமல் வெகு கண்ணியமான மனிதர்களாக இலங்கைத்தமிழர்களை காட்டியதற்காக இயக்குநரைப் பாராட்டலாம். கத்தி போன்ற கூர்மையான வசனங்கள் குறிப்பாக எஸ்.ஜே .பாஸ்கர் பேசும் ஒரு வசனம் , “ இப்போ நான் என்ன மாதிரியான தமிழ் பேசுகிறேன் என்பது பிரச்சினையா ? இல்லை தமிழில் பேசுகிறதே உனக்கு பிரச்சினையா” என்று வடக்கிந்திய காவல்துறை அதிகாரியைப் பார்த்து கேட்குமிடம்.

இப்படி நிறைகளும் குறைகளுமாக முற்றுப்பெறாமல், முழுமையடையாமல் பயணிக்கும் உணர்வையே இந்தப் படம் இறுதியில் தந்துநிற்கின்றது.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# விடிவெள்ளி

ஆவூரான்

அடே "அவிநாசி" எங்கடா இருக்கிறாய்? "

"அவிநாசி அதைஎடுத்துக்கொண்டுவா"

"அவிநாசி ஐயோ உன்னோட பெரிய பாடாய்ப்போச்சு"

அவிநாசி ,இந்தப் பெயர் எமது கிராமத்தின் அத்தனை வீடுகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

அவிநாசியும் நானும் ஒரே வகுப்பில் படித்துக் கொண்டிருந்தோம். அவன் வருவதை வினோதமாக எல்லோரும் பார்ப்பார்கள், அவனுக்குபொருத்தமில்லாத பெரிய அளவிலான சேர்ட்டை பொருத்தமற்ற காற்சட்டையில் அள்ளி முடிந்து அணிந்திருப்பான். பாடசாலையுனுள் அவன் வந்தான் என்றால்

"அவிநாசி இங்க வா இதைக் கொண்டுபோய் அதிபர் அறையில் கொடு"

"அவிநாசி அந்தப் புத்தகத்தை வாங்கி வா"

"அவிநாசி மணி அடி நேரமாகுது " என்று பாடசாலையிலேயே பெரிய அமர்க்களப்படும் . அவன் சுற்றிச் சுழன்று தேவாரம் தொடங்க வரிசையில் வந்து நின்று தேவாரத்தை சத்தமாப் பாடுவான்.

அவிநாசியின் தாய் அவனது ஆறு வயதாக இருக்கும் போது சுகயீனம் காரணமாக இறந்து போக, அவனது தந்தை மறுமணம் செய்து கொண்டு வந்த பெண்ணின் கொடுமை தாங்க முடியாமல் அவனது அம்மம்மாவான செல்லாச்சியுடன் வந்து விட்டான். செல்லாச்சியும் விதவை தான். பத்து மாடுகளும் ஒரு வீடு வளவும் தான்அவளது சொத்து.

எப்போது மாலை சாய்ந்து இருள் சூழத் தொடங்குதோ கிழவி அவிநாசியைத் தேடத் தொடங்கி விடும். நாற்சந்தியில் தான் கிழவியின் வீடு. அந்த வழியால் யார் போனாலும் அவர்களை மறித்து

" இவன் அவிநாசியைக் கண்டியளோ"

"எங்க போனானோ தெரியாது..."

"அவிநாசியை பொன்னையா வீட்டில் கண்டனான்.அங்க நிற்கிறான்" என்று சொன்னால், கிழவி தனது அடுத்த வேலையைப் பார்க்கத் தொடங்கி விடும். இல்லையேல் அதிலேயே சாமம் ஆனாலும் நிற்கும், தேடும், அந்த நேரம் அவிநாசி வந்தானோ தடி எடுத்து நாலு சாத்தல் சாத்தும்.

அடி வேண்டிய அவிநாசி இரண்டு நாள் எங்கேயும் போக மாட்டான். கிழவி சொல்லுறதைக் கேட்டு வீட்டிலேயே இருப்பான் என்ன சமைச்சுக் கிழவி கொடுக்குதோ அதையே சாப்பிட்டு குடித்து போட்டு வீட்டிலேயே இருப்பான்.

அந்த இரண்டு நாளும் எங்கள் கிராமத்து வீடுகளில் அவன் பெயரைக் கூப்பிடாத வாய்களே இருக்காது.

அந்த நேரம் அவிநாசியைத் தேடி யாரும் கிழவியின் வீட்டு வாசல் போனால் கிழவி வாய்க்கு வந்தபடி ஏசிக் கலைக்கும்.

சில நேரம் நான் போனால் " ஓ கலாத் தம்பியா உள்ள வாங்க..... வாங்க தம்பி" என்று கூப்பிடுவார். என் பெயர் கலை என்னை கலா என்று தான் அவிநாசியும் கிழவியும் கூப்பிடுவார்கள். அவிநாசி என்னைக் கண்டதும் ஓடி வருவான். சிறையில் இருந்த கைதிக்கு விடுதலை ஆகபோகும் செய்தி கொண்டு வருபவனைப் பார்க்கும் மகிழ்ச்சியில் .அவிநாசி துள்ளி கொண்டு சந்தோசம் முகத்தில் ஒளிர்வதைப் பார்க்கலாம்.

"கோவில் கழுவப் போறம் அது தான் அவிநாசியைக் கூட்டிக் கொண்டு போக வந்தனான். " என்று நான் சொன்னதும்

"சரி சரி கூட்டிக்கொண்டு போயிட்டு கூட்டிக்கொண்டு வரவேணும்."

"மணி ஐயரா ( ஐயாவா) கூட்டி வரச் சொன்னவர்"? என்று துள்ளிக் குதிப்பான் அவிநாசி

எனக்கு அவிநாசி மீது அனுதாபமா? நிறைந்த அன்பா?, ஆழமான நேசமா? தெரியாது. ஆனால் எனக்கு அவனை நன்றாகப் பிடிக்கும். ஆனால் அவன் என்னைப் பொருட்படுத்தவே மாட்டான். ஏதோ சிறையை உடைத்து தன்னை மீட்க வந்த வேலையாள் மாதிரியே பார்த்து விட்டு கோவிலில் யார் கூப்பிட்டாலும் ஓடிவிடுவான்.

நான் நின்று அவனைப் பார்ப்பேன். அவனின் உயரத்தை தாண்டிய தோப்பளா சட்டை, யாரோ கொடுத்த பெரிய காற்சட்டை அதை அள்ளி முடிந்து இடுப்பில்செருகி இருக்கும் போதும் பார்க்க எனக்கு கவலையாக இருக்கும்.

அவிநாசி கோயிலுக்குள் போய் சற்று நேரத்தில் பெரிய சத்தத்தோடு கன்னத்தைப் பொத்திக்கொண்டு அழுது கொண்டுவந்தான் .நான் ஓடிப்போய் அவனைக் கேட்டால் அவன் விக்கி விக்கிக் கொண்டு கையை மட்டும் காட்டினான்.

அவன் காட்டிய திசையைப் பார்த்தால் மணி ஐயரின் மகன் தான் அவனை சருவச் சட்டியால் அடித்திருக்கிறான். நான் ஓடிப்போய் மணிஐயரின் மகனான பப்பு ஐயரை தள்ளி விட ஓடும்போது மணி ஐயர் கண்டு என்னைத் தடுத்துப் போட்டார்,

" யோவ் அவன் என்ன காரியம் செய்யப் பார்த்தான் தெரியுமா"?போ ...போ உங்களை எல்லாம் கோயிலுக்குள்ள விட்டதே பெரிய விஷயம். கருவறைக்குள்ளே போக நினச்சா அடிக்காம கொஞ்சுவாங்களாக்கும்...."

தண்ணி அள்ளிக் கொடுத்துத் கொண்டிருந்த அவிநாசி, மணி ஐயரின் மகனின் கையில் எட்டிக் கொடுக்க கருவறையின் படியில கால் வைக்க எத்தனித்த போது தான் அவன் அவிநாசியை தள்ளி விட்டுப் போட்டு அடித்திருக்கிறான். எங்களோடு தான் ஐயரின் மகனும் படிக்கிறான். அவிநாசியின் வயது தான். அது தான் அவிநாசிக்கு படு கோபம். அவிநாசி படு கோபக்காரன்.

அவன் லேசில கோபப்பட மாட்டான், தன்னில தவறு இல்லாத போது யாராவது அவரின் தலையில் அடித்தாலோ பேசினாலோ அவிநாசி ஒரு விஸ்வரூபம் எடுப்பான். தன் கோபம் அடங்கும் வரை அடங்க மாட்டான். யானை பலத்தோட கத்துவான். வானத்துக்கும் பூமிக்கும் குதிப்பான். கையில் கிடைத்த பொருளால் தூக்கி அடிப்பான். வாய் திக்கும், பேச்சு வராது, கண் முழி மேல செருகி பார்க்கவே பயங்கரமாகுவான். ஆசிரியரோ, அதிபரோ, ஊர் பெரியவரோ எதுவும் பார்க்கமாட்டான்.

ஆனால் அன்று ஐயர் பொடியன் சட்டியால அடித்ததும் அழுது கொண்டு வந்தானே தவிர எதுவும் சொல்லவில்லை. அவிநாசி அழுவதைப் பார்த்து நான் தான் கோபப்பட்டேன்.

இப்படி அவிநாசி அடங்குறான் என்றால் தான் தவறுதலாக கருவறைப் படியில் கால் வைத்தது தன்னுடைய பிழை என்று உணர்ந்து விட்டானா இல்லை ஐயர் பெடியன் என்பதால் ஒன்று திருப்பி செய்யாமல் வந்து விட்டானா என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை.

அன்று வெள்ளிக் கிழமை காலையில் கோயில் கழுவி சுத்தம் செய்யும் போது நடந்தது எல்லாவற்றையும் அவிநாசி மறந்து போனான். மாலை நடந்த பஜனையில் முதல் ஆளாக திருநீற்றுப் பட்டையும் பூசி சந்தனத்தையும் அள்ளி நெஞ்சிலையும், கை, உடம்பிலேயும் பூசிக்கொண்டு நிற்க ஐயர் தேவாரம் முடிந்து அம்மாளுக்கு ஆராத்தி எடுத்து திருநீறும் கொடுக்கத் தொடங்கும் போது அவிநாசியைக் கூப்பிட்டு "அவிநாசி இந்த அவலை எல்லோருக்கும் கொடு" என்று சொன்னதும் ஓடிப்போய் அவல் தட்டை வேண்டி எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தான். எனது முறை வந்ததும் அவலை அள்ளி கையால் இறுக்கிப் பிடி கொழுக்கட்டை மாதிரிச் செய்து என் முகத்தை நிமிர்ந்து நேருக்கு நேர் பார்த்ததும் கையில் அவலைத் தந்தான்.

காலையில் நடந்த சம்பவத்துக்குள் ஆயிரம் அர்த்தங்கள் நிறைந்து இருப்பதை அவன் பார்வையில் விளக்கினான்.

அவிநாசியை என்னால் புரிய முடியவில்லை. நான் அவிநாசியை மனதுக்குள் நிறைத்து வைத்து அன்பு காட்டிறன். ஆனால் அவன் எல்லோரைப் பார்ப்பது போல என்னையும் பார்க்கிறான், சில செயல்களில் என்னை ஆழமாகநேசிக்கிறான்.

அன்றொரு நாள் நானும் அவிநாசியும் வரதனும் பாடசாலை வராண்டாவில் நடந்து கொண்டிருந்தோம். எங்களின் பக்கத்து வகுப்பு மாணவியான தேவி எங்கள் அருகில் நடந்து வந்தவள் தவறுதலாக கால் தடக்கி விழுந்தாள்.

கால் நோவோடு ஓடிப்போய் பரமேஸ்வரி ரீச்சரிடம் சொல்ல பாமேஸ்வரி ரீச்சருக்கும் எங்கள் குடும்பத்துக்கும் வாய்க்கால் தகராறு கோழிச் சண்டை என்று பல விரோதங்களை மனதில் வைத்துக்கொண்டிருந்தவர்.

இதை ஒரு சந்தர்ப்பமாக எடுத்து என்னைப் போட்டு அடி அடி என்று அடிக்க என்ன கோபம் வந்ததோ தெரியாது பரமேஸ்வரி ரீச்சரிடம் இருந்த தடியைப் பறித்து எறிந்ததோடு வாய் பேச முடியாமல் திக்கு வாய்ப் பிள்ளை மாதிரி கண்களையும் செருகி பெரிய பதற்றத்துடன் அவிநாசி கத்தின கத்தலில் எல்லா வகுப்பறையும் சில நிமிடம் உறைந்து போனது.

உடனே அதிபர் தலையிட்டு தேவியையும் அவிநாசியையும் விசாரித்து என்னில் தவறில்லை என்று அதிபர் கண்டதன் பின்பு பரமேஸ்வரி ரீச்சர் மன்னிப்புக் கேட்க அதிபர் சொல்ல ரீச்சர் மன்னிப்பு கேட்டதன் பின்பு தான் அவிநாசி அடங்கினான்.

என்ர முதுகிலும் தோளிலும் தட்டிக் கொண்டு போனான்.

எங்கள் கிராமத்தில் அப்போது ஆரம்பிக்கப்பட்டஎமது விளையாட்டு மைதானம் திருத்த வேலைகள் நடந்து கொண்டிருந்தது. அவிநாசிக்கு பந்து விளையாட்டில் ஆர்வம் இருந்தது, ஒரு நாள் பாடசாலை மைதானத்தில் பந்து விளையாடும் போது உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் பந்தை வேகமாக அடிக்க அது போய் அவிநாசியின் வயிற்றுப் பகுதியில் பிடித்து அடிபட்டதும் அவன் மயக்கம் போட்டு விழுந்து துடித்தான். சில மணித் துளிகள் அவன் மயக்கம் தெளிந்து வந்தவன் தான் அதன் பின்பு பந்து விளையாடும் எந்த இடத்துக்கும் வரமாட்டான். ஆனால் மைதானத் திருத்த வேலைகளுக்கு வந்து நிறைய உதவிகள் செய்வான்.

எங்கள் கிராமத்தில் மாதம் ஒரு முறை பௌர்ணமி விழா நடாத்துவோம் எல்லா வேலைகளையும் அவிநாசி முன்னின்று செய்வான்.

பௌர்ணமி விழா நெருங்கிக் கொண்டிருந்தது.அந்த நேரம் ஆபுசு படம் பார்க்க நாங்கள் பத்துப் பேர் சேர்ந்து போகலாம் என்று திட்டம் போட்டது அவிநாசிக்குத் தெரிய வர கிழவியோடு சண்டை போட்டு அடம் பிடித்து அவனும் எங்களோட படம் பார்க்க வந்தவன். பட மாளிகையில் அவன் படம் பார்க்கப் பார்க்க ஒரே விசிலடியும் சத்தமுமாகத்தான் எல்லோருடனும் சேர்ந்து கொண்டாடித் தீர்த்தான்.

படம் முடிந்து வெளியில் வந்தான் எம்ஜிஆர் மாதிரியே நடித்துக் காட்டினான். நாங்கள் எல்லோரும் கை தட்டிப் பாராட்டியது வெட்கப்பட்டுக் கொண்டு சையிக்கிளை எடுத்துக் கொண்டு ஓடினான்."

படம் விட்டு வீட்ட போகும் போது விஞ்ஞான ரீச்சர் வீட்டால கணித வாத்தியார் சபா போவதைப் பார்த்து விட்டு காலையில் அதிபரிடம் அவன் சொல்லியிருக்கிறான்

அதிபர் பரமேஸ்வரி ரீச்சரைக்டு கூப்பிட்டுப் பேசி இருக்கிறார், அன்று கணித பாட சபா மாஸ்ரர் பாடசாலைக்கு வரவில்லை.

அவிநாசி இவ்வளவு கண்ணியமா அதை யாரிடமும் சொல்லாமல் ஏன் எங்களோடு கூடச் சொல்லாமல் அதிபரோடு மட்டும் சொன்னது அவன்மேல பாரிய பற்றுதல் பிறந்தது. பலருக்கும்

அதன் பிறகு பரமேஸ்வரி ரீச்சர் அவிநாசியோடு சகஜமாகத் தான் எங்கள் முன் பழகுவது எமக்குத் தெரிந்தது, சில வேளைகளில் அவிநாசியை ரீச்சர் கூப்பிடுவா அவன் போகமாட்டான்.

விஞ்ஞான ரீச்சர்தான் அவாவிட தோற்றமும் அவா சாறி கட்டும் அழகும் மாணவர்களாகி எமக்கும் கொஞ்சம் விசரமாகத்தான் இருப்பதை பல ரீச்சர்மாரே பேசிக் கொள்வதை கேட்டிருக்கிறோம்.

இந்தப் பிரச்சனை முடியமுன் அவிநாசியின் ஆச்சி மாடு முட்டி பயங்கரமான காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஊர் மக்கள் இரண்டு வேளையும் கிழவிக்கும் அவிநாசிக்கும் சாப்பாடு கொடுத்துக் கொண்டு வந்தார்கள்.

கிழவி அவிநாசியைப் பார்த்துப் பார்த்து அவனின் கையைப் பிடித்துக் கொண்டு அழும்,

ஒரு நாள் கிழவியும் கண் மூடி விட்டது. கிழவியின் மரணச் சடங்குக்கு வந்தவர்கள் என்று தூரத்து உறவுக்காரர். அந்தி ரெட்டி முடிந்ததும் போய் விட்டார்கள், ஒரு தாயும் மகளும் வீட்டோடு இருந்து விட்டார்கள். அந்தத் தாயும் மகளும் அவிநாசிக்கு பலமுறை சத்தம் போட்டும் கத்தியும் வேலைகள் சொல்வார்கள். அவிநாசி அவர்களை ஒரு பொருட்டாகவே கருதவில்லை

தென்னை,மா, பலா, மாடுகள் என்று வருமானம் வருகின்ற வீட்டில் அவர்கள் தங்கி விட்டார்கள். அவிநாசி எப்ப பார்த்தாலும் ஊரில் உள்ள வீடுகளில் வேலை செய்வான், கொடுக்கிறதைச் சாப்பிடுப்பிடுவான். பாடசாலைக்கு சில நாட்கள் வருவான், பல நாட்கள் எங்கு போனான் என்றே தெரியாது.

எமது பாடசாலையின் ஆண்டு விழா நடக்க இருந்த ஒரு கிழமைக்கு முன்னமே அவிநாசி பாடசாலை வந்தவன். ஒரு விதமாக இருந்தான் . பறட்டத்தலை, கிளிஞ்சலான சேட்டும்.

நாங்கள் எல்லோரும் அவனைக் கட்டாயமாக சிறி அண்ணனின் சலூனுக்கு கூட்டிப்போய் தலை மயிரை வெட்ட வைச்சு எங்கட வீட்டில் குளிக்க வைச்சு, சாப்பாடும் கொடுத்து, பக்கத்து வீட்டு ராணி அக்கா அவரின் மகனின் சேர்ட்டையும் , பழைய காற்சட்டையையும் கொடுக்க வேண்டிபோட்டுக் கொண்டு கம்பீரமாக நடந்து போனான்.

மறு நாள் பாடசாலை முடியவே பாடசாலைக்கு வந்தான், வேலைகளில் கை கொடுத்தான்.

எங்களோடு பேசிக்கொண்டிருக்கும் போது அதிபர் ஒரு பார்சலை கொண்டு வந்து என்னிடம் தந்தார்.

கணித மாஸ்ரர் சபா பரமேஸ்வரி ரீச்சரிடம் கொடுக்கச் சொன்னதாகவும், நான்வீட்டுக்குப் போகும் போது கொடுத்து விடச்சொல்லிச் சொன்னார். " நான் போக இருண்டு போகுமே" என்று யோசிக்கும் போது, அவிநாசி முன்னுக்கு நின்றான்.

"அவிநாசி இதைக் கொண்டுபோய் பரமேஸ்வரி ரீச்சர் வீட்டில் கொடுத்து விட்டு வாறியா? நான் போக இருண்டு போகும்."

அவன் போகக் கொஞ்சம் தயங்கினான்

"தயவு செய்து...". அவிநாசியிடம் கெஞ்சிக்கேட்டனான். அவன் வேண்டா வெறுப்பாக பார்சலைக் கொண்டு போனவன்.

சில மணி நேரத்துக்குப் பின் அங்கிருந்து கத்திக் குளறிக் கொண்டு ஓடி வந்தான்.

"ரீச்சர் இரத்த வெள்ளத்தில கிடப்பதாகவும் தான் தூக்கிப் பார்க்கும் போது தண்ணி .... தண்ணி "என்று கேட்டதாகவும் சொன்னான்.

நாம் எல்லாவற்றையும் விட்டுப்போட்டு ஓடிப்போய்ப் பார்க்கும் போது ரீச்சரின் உயிர் பிரிந்து விட்டது.

இரவு எட்டு மணிக்கு பொலிஸ் வந்தது. எல்லா இடத்திலும் தடையத்தைத் தேடிக்கொண்டிருக்கும் போது அவிநாசியை விசாரித்துக் கொண்டிருக்க அவனே கத்தி கிடக்கும் இடத்தைக் காட்டினான்.

அவிநாசியும் பொலிஸின் பாதுகாப்பில் இருந்தான்.

பரமேஸ்வரி ரீச்சர் உடலை அவரின் உறவினர்கள் கொண்டு போக காலமும் ஓடிப் போக நாமும் நாடு விட்டு நாடு வந்து விட்டோம்,

நீங்கள் சொல்லும் வரை அவிநாசியை நாமும் மறந்து போனோம்.

"முகுந்தன் நீங்கள் தீர்க்கமாகச் சொல்வதைப் பார்த்தால், அவிநாசி இக் கொலையை செய்யவில்லை என்று சொல்கிறிர்களா?"

"உண்மையாக இக் கொலைக்குத் தண்டனையை நான் தான் அனுபவிக்க வேண்டும். அவிநாசியை நான் தான் ரீச்சர் வீட்டுக்கு அனுப்பினேன்."

"அப்படி என்றால் யார் இந்தக் கொலையைச் செய்திருப்பார்கள்? என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"

"எனக்கு யார் என்று சொல்லத் தெரியவில்லை. ஆனால் கணித மாஸ்ரருக்கும் ரீச்சருக்கும் இடையில் இருந்த உறவை வைத்து அவர் கூட இக் கொலையை செய்திருக்கலாம் அந்தக் கோணத்தில் ஏன் உங்கட சட்டம் ஆராய முற்படவில்லை என்பது தெரியவில்லை .எப்படியோ இந்தக்

கொலையை அவிநாசி செய்யவில்லை அது நூறு வீதம் நாங்கள் நம்புறம்,அவன் பழியைத் தான் சுமக்கிறான்.அவனை விடுதலை செய்ய ஆவன செய்யுங்கள் இனியாவது அவன் சந்தோசமாக வாழட்டும்.

ஐயா நீங்கள் உயர் நீதி மன்றத்தின் முன்னைய நாள் நீதி அரசராக இருந்து பல வழக்குகளின் தீர்ப்புக்களை திருத்தி எழுதி இருக்கிறீர்க.ள் இந்த வழக்கை விசாரிக்க எடுத்திருக்கிறீர்கள் நல்ல தீர்ப்பை வழங்க வேண்டும்."

"தம்பி முகுந்தன் இது வரை காலமும் என்னிடம் தந்த வழக்குகளில் இது கொஞ்சம் விடை காணமுடியாத பல புதிர் நிறைந்ததாக இருந்தன. உங்களின் நேரலை சாட்சியத்தின் மூலம் நான் பல கேள்விகளுக்கு விடை கண்டிருக்கிறேன்.கூடிய விரைவில் நல்ல செய்திவரும்."

"ஐயா உங்களால் அவிநாசியினுடைய இருள் வானில் ஒரு விடிவெள்ளி தோன்றட்டும்."

குறிப்பு: -அவிநாசி ரீச்சரின் வீட்டுக்கு அடிக்கடி போய் வருவதை அறிந்த அவிநாசியின் கிழவியின் உறவுக்காரரான தாயும்,மகளும் வேறு ஒருவரின் துணையுடன் கொலையை செய்து அவிநாசியின் மேல் பழியைப் போட்டார்கள் என்பது நிருபணமாகியதால் அவிநாசி சிறையில் இருந்து விடுதலையாகி விட்டான்.

(யாவும்கற்பனையே)


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


Best Start
Best Life
இலவசக் கின்டர்: உங்கள் குழந்தையை 2025 ஆம் ஆண்டிற்காப் பதிவு செய்யுங்கள்
விக்டோரியாவில் மூன்று மற்றும் நான்கு வயது குழந்தைகளுக்கு இலவசக் கின்டர் கிடைக்கிறது. இதனால் ஒரு குழந்தைக்கு ஆண்டு ஒன்றிற்கு $2,563 வரை குடும்பங்களால் சேமிக்க முடியும்.
இரண்டு ஆண்டுகளுக்கான கின்டர் உங்கள் பிள்ளை அவர்களின் முக்கிய திறன்களை வளர்த்துக் கொள்ள உதவும், எனவே அவர்கள் பள்ளியிலும் வாழ்க்கையிலும் சிறப்பாகச் செயல்படுவார்கள்.
இலவசக் கின்டர் அனைவருக்குமானது . உங்களுக்குச் சுகாதாரப் பராமரிப்பு அட்டை அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது அது போன்றவை) தேவையில்லை.
மேலும் தகவல்களை அறிய இங்கு பார்வையிடுங்கள் vic.gov.au/kinder/tamil
THE EDUCATION STATE
VICTORIA State Government
Department of Education
KINDERGARTEN

# காஷ்மீர் யாருக்குச் சொந்தம்?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

காஷ்மீர் இந்தியாவுக்கா, பாகிஸ்தானுக்கா சொந்தம் என்ற கேள்வி நீண்டகாலமாகவே தொடர்கிறது. உண்மையில் இந்த இருநாடுகளுக்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே உண்மை.

பல்வேறு இனப் பிராந்திய 'தேசங்களாக' இருந்த இந்திய நிலப்பரப்பை பிரிட்டிஷார் கைப்பற்றி ஒருங்கிணைந்த இந்தியாவாக உருவாக்கிய போதும் காஷ்மீர் மன்னர் ஆளும் தனி நாடாகவே இருந்தது. அது ஒரு போதும் பிரிட்டிஷ் இந்தியாவின் கீழ் இருந்ததில்லை.

இந்தியா சுதந்திரம் அடைந்ததும் இந்திய நிலப்பரப்பில் அடங்கி இருந்த சமஸ்தானங்கள் இந்தியாவோடும், பாகிஸ்தான் நிலப்பரப்பில் அமைந்த சமஸ்தானங்கள் பாகிஸ்தானோடும் இணைந்தன.

புவியியல் ரீதியாக இரண்டில் இருந்தும் ஒதுங்கி இருந்த காஷ்மீர் தனி நாடாகவே இருந்து விட்டது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர் முஸ்லிம்களாகவும் மன்னர் இந்துவாகவும் இருந்தும் கூட எந்தப் பிணக்கும் அங்கு பெரியளவில் இல்லை.

காஷ்மீர் மக்கள் முஸ்லிம்கள் என்பதால் தாங்கள் படையெடுத்துச் சென்றால் நம்மை ஆதரிப்பார்கள் என்று தப்பு கணக்கு போட்டு பாகிஸ்தான் உள்ளே நுழைய ,நாட்டைக் காக்க மன்னர் ராம்சிங் இந்திய இராணுவத்தின் உதவியை நாடினார்.

**காஷ்மீரின் தொடர் பிணக்கு :**

பாகிஸ்தான் ஆக்கிரமித்த பகுதியை பாகிஸ்தான் எடுத்துக் கொள்ள , இந்தியப் படைகள் நுழைந்த பிறகு மிஞ்சிய பகுதி-களை இந்தியா இணைத்துக் கொள்ள அன்று பிடித்தது அந்த நிலப்பரப்பிற்கும் காஷ்மீர் மக்களுக்கும் தீராத வலி.

"காஷ்மீரிகள் என்றாலே பாகிஸ்தான் ஆதரவாளர்கள்" என்ற ஒரு மாயை அநேகருக்கு உண்டு.

ஆனால் காஷ்மீர்மக்கள் பாகிஸ்தானை முழுமையாக விரும்புவதில்லை. தங்களின் அத்தனை தொடர் இன்னலுக்கும் பாகிஸ்தானும் காரணம் என்றே கூறுவார்கள்.

1940களின் இறுதியில் காஷ்மீரை இந்தியாவோடு இணைத்த போது நேரு அப்போது "சில உரிமைகளை" அரசியல் சாசனப் பிரிவிலேயே எழுதிக் கொடுத்தார். ஆனால் அவை தான் தற்போது நீக்கப்பட்டு இருக்கின்றன.

**370 சட்டப்பிரிவு நீக்கம்:**

இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திரம் பெற்றது முதல் தீர்க்கப்படாத பிரச்சினையாக காஷ்மீர் விவகாரம் இருந்து வருகிறது. நிலப்பகுதிகள் ஆக்கிரமிப்பு, அதனைத் தொடர்ந்து போர் அல்லது இராணுவ நடவடிக்கை நடைபெறுவதும் காஷ்மீரில் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த விவகாரத்துக்காக இந்தியாவும், பாகிஸ்தானும் ஐ.நா.வரை சென்று குரல் எழுப்பிய வரலாறும் தொடர்ந்து நடந்து வந்துள்ளது.

2019இல் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370-வது சட்டப்பிரிவு ரத்து செய்யப்படுவதாக உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிவித்தார். இதைத் தொடர்ந்து ஜம்மு - காஷ்மீர் மாநிலம் இரண்டாகப் பிரிக்கப்படுவதாக அமித் ஷா இதுதொடர்பான மசோதாவை அவர் தாக்கல் செய்தார்.

அதன்படி தற்போது ஜம்மு - காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய இரு யூனியன் பிரதேசமாக செயற்படும் என அமித் ஷா அறிவித்தார். இந்திய அரசமைப்புச் சட்டம் இனிமேல் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்துக்கும் பொருந்தும் என்று குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அரசமைப்புச் சட்ட உத்தரவு பிறப்பித்தார்.

**வல்லபாய் படேல் கால இணைப்பு:**

70 ஆண்டுகளுக்கும் மேலாக காஷ்மீர் விவகாரத்தில் இரு நாடுகளும் பல தடவை மோதிக் கொண்டுள்ளன. இந்திய நாடு சுதந்திரமடைந்த பிறகு சுதேச சமஸ்தானங்களை இணைக்கும் பணியை அப்போதைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேல் மேற்கொண்டார். ஹைதராபாத், ஜுனகட் போல காஷ்மீரும் இந்தியாவுடன் இணைய மறுத்தது. படேலின் முயற்சியால் ஹைதராபாத், ஜுனகட் சமஸ்தானங்கள் இணைந்தன.

ஆயினும் காஷ்மீரைப் பொறுத்தவரை சுதந்திரமடையும் போது மன்னராக இருந்த ஹரிசிங், இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் இணைவதில்லை என்ற முடிவை எடுத்தார்.

காஷ்மீர் மன்னர் ஹரி சிங் ஒரு இந்து. ஆனால் காஷ்மீரில் வசித்தவர்களில் பெரும்பாலானோர் இஸ்லாமியர்களாக இருந்தனர். இதனால் இந்தியாவுடன் சேர்வதா அல்லது பாகிஸ்தானுடன் இணைவதா என்ற கேள்வி தொடர்ந்தது.

ஜம்மு மற்றும் சுற்றுப்பகுதி மக்கள் இந்தியாவுடன் இணைய விரும்பினர். அதேவேளையில் காஷ்மீரின் மேற்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் பாகிஸ்தானுடன் இணைய விரும்பினர்.

**பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு :**

இந்நிலையில் 1947-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பாகிஸ்தான் பழங்குடி மக்களைக் கொண்ட படை காஷ்மீருக்குள் நுழைந்தது. தற்போதைய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை வளைத்தது. பாகிஸ்தான் இராணுவம் பின்புலத்தில் இருந்து செயல்பட்டது.




வேறு வழியில்லாத சூழலில் மன்னர் ஹரி சிங், இந்தியாவிடம் இராணுவ உதவி கோரினார். காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க அவர் சம்மதித்தார். அப்போது பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் மன்னர் ஹரி சிங் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

காஷ்மீர் இந்தியாவுடன் இணைய ஒப்புக்கொண்டது. அதன் பாதுகாப்புக்கு இந்தியா முழுப் பொறுப்பேற்றது. இருப்பினும் பாகிஸ்தான் காஷ்மீரின் குறிப்பிட்ட பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டதால் நேரு, ஐ.நா.விடம் முறையிட்டார். இதனைத் தொடர்ந்து ஐ.நா. சபையின் தீர்மானத்தின்படி பாகிஸ்தான் படைகளும் தங்கள் பகுதிக்குள் இருக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் கட்டுப்பாட்டுக்கோடு உருவாக்கப்பட்டது. இன்றவுளவும் அதுவே காஷ்மீரின் பாகிஸ்தானுடனான தார்மீக எல்லையாக இருந்து வருகிறது.

**காஷ்மீர் இந்தியாவுடன் இணைப்பு:**

காஷ்மீர் மாநிலத்தில் வாக்கெடுப்பு நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் இதற்கு இருநாடுகளும் எதிர்ப்பு தெரிவித்தன. இதனால் வாக்கெடுப்பு இன்று வரை நடைபெறவில்லை. இந்த ஒப்பந்தத்திற்கு முன்பாகவே காஷ்மீர் விவகாரத்தில் மன்னர் ஹரி சிங்கின் பங்கு முடிந்து விட்டது.

தேசிய மாநாட்டுக் கட்சி இஸ்லாமிய மக்களிடையே செல்வாக்கு பெற்ற கட்சியாக இருந்தது. அந்தக்கட்சியின் தலைவராக ஷேக் அப்துல்லா இருந்தார். முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லாவின் தந்தை இவர். உமர் அப்துல்லாவின் தாத்தா ஆவார். எனவே மன்னர் ஹரி சிங்குக்கு பிறகு காஷ்மீர் விவகாரத்தில் அதன் தரப்பாக ஷேக் அப்துல்லா இருந்தார்.

**370 ஜம்மு-காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து:**

1948ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பிரிவு 370 சேர்க்கப்பட்டது. இந்தப் பிரிவு ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கியது. அத்துடன் 1952 ஆம் ஆண்டு ஷேக் அப்துல்லா மற்றும் பிரதமர் நேரு ஆகியோர் இடையே ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

அப்போதைய குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் சட்டபிரிவு 35 ஏ-வை உருவாக்கி ஆணை பிறப்பித்தார். இது அரசியல் சட்டப்பிரிவு 370-ன் இணைப்பாக பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சட்டப்பிரிவு 35ஏ ஜம்மு- காஷ்மீர் மக்களுக்கு பிரத்யேக சலுகைகளை வழங்குகிறது.

சட்டப்பிரிவு 35ஏபடி, ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்கள் யார் என்பதை நிர்ணயம் செய்கிறது.

அதன்படி நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்களுக்கு சிறப்பு உரிமைகள் உள்ளன. அரசுப் பணி பெறும் உரிமை, நிலம், வீடு போன்ற சொத்து வாங்கும் உரிமை, அரசு ஊக்கத்தொகை மற்றும் பிற சலுகைகளைப் பெறும் உரிமைகளை அளிக்கிறது. இது நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

**சட்டப்பிரிவு 35ஏ சிறப்புரிமை :**

சட்டப்பிரிவு 35ஏ யின் படி வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் காஷ்மீரில் சொத்து வாங்க முடியாது. ஆனால் அவர்கள் வெளி மாநிலங்களில் சொத்துகளை வாங்க முடியும். அதுபோல மற்றவர்களுக்கு அரசு வேலை கிடைக்காது.

ஜம்மு- காஷ்மீரில் நிரந்தரக் குடியுரிமை பெற்ற பெண் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவரையோ அல்லது நிரந்தரக் குடியுரிமை பெறாதவரையோ திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு நிரந்தரக் குடியுரிமை வழங்கப்படாது.

இதுபோன்ற பெண்கள் சொத்திலும் உரிமை கொண்டாட முடியாது.

1950களில் காஷ்மீரின் பெரும்பான்மையான பகுதி இந்தியாவுடன் இணைந்தாலும் அது நாட்டின் தனிப்பகுதியாகவே இருந்து வருகிறது. இந்தியா - பாகிஸ்தான் இடையே வெறுப்பும், வன்மமும், பகையும் ஏற்பட பல காரணங்கள் இருந்தாலும் முதன்மையான காரணமாக காஷ்மீர் விளங்கி வருகிறது.

இந்த விவகாரத்தை வைத்து சர்வதேச நாடுகளிடமும், ஐ.நா.விடமும் ஒவ்வொரு முறையும் பாகிஸ்தான் அரசியல் செய்கிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கையில் இந்தியாவும் ஈடுபட்டு வருகிறது.

**1962-ம் ஆண்டு நடந்த இந்தியா - பாக். போர்:**

இந்தக் காரணத்தை முன்வைத்தே இரு நாடுகள் இடையே போர்களும் நடந்துள்ளன. 1962 ஆம் ஆண்டு முதல் இந்தியா - பாக். போர் மூன்று தடவைகள் நடந்துள்ளது.

1989-ம் ஆண்டுக்குப் பிறகு காஷ்மீரில் தீவிரவாதம் புதிய வடிவத்தை எடுத்தது. காஷ்மீர் தீவிரவாதமும், அதனைத் தூண்டிவிடும் பாகிஸ்தானும் இன்றளவும் இந்தியாவுக்குப் பெரிய தலைவலியாக இருந்து வருவதாக மத்திய அரசு குற்றஞ்சாட்டி வருகிறது.

அரசியல் ரீதியாக காஷ்மீர் பல துண்டுகளாகி விட்டது. தேசிய மாநாட்டுக் கட்சி மட்டுமின்றி மக்கள் ஜனநாயக கட்சியும் காஷ்மீர் பள்ளத்தாக்கு மக்களின் கட்சியாக விளங்குகிறது. பா.ஜ.க.வும், காங்கிரஸூம் ஜம்மு பகுதியை பிரதிநிதித்துவப் படுத்த மத முரண்பாட்டை பயன்படுத்துவதுடன், அரசியல் மட்டுமின்றி பிரிவினைவாதம், தீவிரவாதம் என பல வடிவங்களைக் கொண்ட சிக்கல் நிறைந்த பிரச்சினையாக காஷ்மீர் விவகாரம் உருவெடுத்துள்ளது.

**காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு சொந்தம்!**

ஆயினும் காஷ்மீரிகள் பல்லாண்டுகளாக தொடரும் அடக்குமுறைகளின் மத்தியிலும், இன்னமும் தங்கள் சுய அடையாளத்தை இழக்கவில்லை. அவர்களைப் பொறுத்த அளவில் அவர்கள் இந்தியரும் அல்ல! பாகிஸ்தானியரும் அல்ல! காஷ்மீரிகள்!! இந்த இரு நாட்டிற்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே உண்மை.

காலங்கடந்தும் தீராத பதில் ஒன்று தான். அதுவே இந்தியாவுக்கா அன்றில் இல்லை பாகிஸ்தானுக்கோ இல்லை. வரலாற்று உண்மையாக இருவருக்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே யதார்த்தமாகிறது.

# இரும்பு மனிதனை வீழ்த்திய சிங்கப்பெண்!



ஆஸ்திரேலிய அரசியல் களத்தில் இரும்பு மனிதனாகக் கருதப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டனை, அவரது அரசியல் கோட்டையிலேயே மண்டியிடவைத்த பெண் அரசியல்வாதி சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

விபத்தில் தனது ஒற்றைக் காலை இழந்து, மகனையும் பறிகொடுத்து - தனிப்பட்ட வாழ்விலும் பல்வேறு துன்பங்களை எதிர் கொண்ட அவரின் வெற்றியை லேபர் கட்சியினர் கொண்டாடி வருகின்றனர்.

பிரிஸ்பேனில் டிக்சன் தொகுதியென்பது பீட்டர் டட்டனின் அரசியல் கோட்டை. 2001 ஆம் ஆண்டுமுதல் அத்தொகுதியில் அவர் வென்று வருகின்றார். லிபரல் கட்சி பின்னடைவுகளை சந்தித்தவேளைகளில்கூட அத்தொகுதியில் பீட்டர் டட்டனுக்குரிய செல்வாக்கு சரியவில்லை.

இந்நிலையில் இம்முறை பீட்டர் டட்டனை, லேபர் கட்சி வேட்பாளரான அலி பிரான்ஸ், டிக்சன் தொகுதியில் மண்கவ்வ வைத்துள்ளார்.

அத்தொகுதியில் தனக்கான வெற்றியை இம்முறை உறுதிப்படுத்தி - முதன்முறையாக நாடாளுமன்றம் செல்லவுள்ளார்.

அவருக்கு எதர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன், தொலைபேசி வாயிலாக வாழ்த்து தெரிவித்துள்ளார்.

49 வயதான அலி பிரான்ஸ், கடந்த வருடம் தனது மூத்த மகனை பறிகொடுத்தார். புற்றுநோயால் அவர் உயிரிழந்தார்.

தனது 2 ஆவது மகன் விபத்தில் படுகாயமடைந்த நிலையில், 2011 ஆம் ஆண்டில் அவரது ஒரு கால் அகற்றப்பட்டது. இவ் விபத்தில் தனது மகனை காப்பாற்றுவதற்கு முற்பட்டவேளையிலேயே அலி பிரான்ஸ் தனது ஒரு காலை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல அவரது திருமண வாழ்வுகூட சோகத்திலேயே முடிந்துள்ளது. இவ்வளவு பிரச்சினைகள் இருந்தும் அரசியலில் அவர் சாதித்துக்காட்டியுள்ளார். அவரை பலரும் தற்போது பாராட்டி வருகின்றனர்.

அத்துடன், லேபர் கட்சியின் வெற்றிக்கு சமாந்தரமாக லேபர் கட்சி ஆதரவாளர்களால் இவரின் வெற்றியும் கொண்டாடப்படுகின்றது.

அதேவேளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மிச்சேல் ஆனந்தராஜா இம்முறை செனட்டராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் மறுசீரமைப்புக்கமைய அவரது தொகுதி இல்லாது செய்யப்பட்டதால் அவர் செனட் உறுப்புரிமைக்காகவே போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார்.

# லிபரல் கட்சிக்கு பெண் தலைமைத்துவம்!



லிபரல் கட்சியின் புதிய தலைவராக சூசன் லே தெரிவு செய்யப்பட்டுள்ளார். லிபரல் கட்சி வரலாற்றில் இம்முறையே தலைமைப் பதவிக்கு பெண்ணொருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

புதிய தலைவரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு இன்று கன்பராவில் நடைபெற்றது.

தலைமைப்பதவிக்கு துணைத் தலைவர் சூசன் லே, முன்னாள் நிழல் பொருளாளர் அங்கஸ் டெய்லர் ஆகியோர் போட்டியிட்டனர். இதில் அங்கஸ் டெய்லரை 29 வாக்குகள் வித்தியாசத்தில் லே தோற்கடித்தார்.

டெ ஒ பிரையன் துணை தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# நியூசிலாந்தில் இருந்து பெரும் புள்ளி களமிறக்கம்!

நியூசிலாந்தின் முன்னாள் பொலிஸ் ஆணையாளர் மைக் புஷ், ஆஸ்திரேலியா விக்டோரியா மாநிலத்தின் பிரதம பொலிஸ் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூன் 27ஆம் திகதி அவர் இப்பதவியை பொறுப்பேற்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

விக்டோரிய மாநில பொலிஸ் ஆணையாளராக பதவி வகித்த ஷேன் பாட்டன் அண்மையில் பதவி விலகினார்.

இந்நிலையிலேயே புதிய ஆணையர் தொடர்பான அறிவிப்பை மாநில பிரீமியர் இன்று வெளியிட்டார்.

விக்டோரிய காவல்துறையை வழிநடத்த மைக் புஷ் பொருத்தமான நபர் எனவும் பிரீமியர் குறிப்பிட்டார்.



நியூசிலாந்தில் 2021 ஆம் ஆண்டு பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்றவேளை இவர் அந்நாட்டின் பொலிஸ் ஆணையாளராக பதவி வகித்துள்ளார்.

இவர் நியூ சவுத் வேல்ஸ் பொலிஸ் ஆணையாளராக பதவியேற்கும்வரை, துணை ஆணையாளர், பதில் ஆணையாளராக செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இரு ஈழத் தமிழர்கள் அதி உயர் சபைக்கு தெரிவு

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தலில் லேபர் கட்சி சார்பில் போட்டியிட்ட ஈழத் தமிழர் பின்னணி கொண்ட Ashvini Ambihaipahar வெற்றிபெற்றுள்ளார்.

நியூ சவுத் வேல்ஸில், பார்டன் தொகுதியில் இவர் இம்முறை களமிறங்கினார்.

46 சதவீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெற்று அவர் வெற்றியை உறுதி செய்துள்ளார். அவர் முதன் முறையாக ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளார்.

அவரது வெற்றிக்கு ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழ் சமூகம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது.

இவர் ஈழத்து கவிஞரான அம்பிகைபாகரின் பேத்தி என்பது குறிப்பிடத்தக்கது.



அதேவேளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மிச்சேல் ஆனந்தராஜா இம்முறை செனட்டராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் மறுசீரமைப்புக்கமைய அவரது தொகுதி இல்லாது செய்யப்பட்டதால் அவர் செனட் உறுப்புரிமைக்காகவே போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார்.

# கங்காரு தேசத்தில் கர்ஜிக்க தயாராகும் பெண் சிங்கங்கள்!

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இம்முறை பெண் பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளது.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கு தெரிவாகும் 150 எம்.பிக்களில், 66 முதல் 74 வரையான பெண் எம்.பிக்கள் இடம்பெறவுள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத்தில் 58 பெண் எம்.பிக்கள் இடம்பெற்றிருந்தனர். 2019 ஸ்கொட் மொரிசன் ஆட்சியின்போது அந்த எண்ணிக்கை 40 ஆகவே காணப்பட்டது.

பிரதிநிதித்துவ சபையில் லேபர் கட்சிக்கு இதுவரை உறுதிப்படுத்தப்பட்டுள்ள 87 ஆசனங்களில் 47 தொகுதிகளில் பெண் வேட்பாளர்களே வென்றுள்ளனர்.



பூர்வக்குடி அமைச்சர் லிண்டா பர்னியை அவரது தொகுதியில் வீழ்த்திய ஈழத்து தமிழ் பின்னணி கொண்ட Ashvini Ambihaipahar, எதிர்க்கட்சி தலைவர் பீட்டர் டட்டனை மண்கவ்வ வைத்த அலி பிரான்ஸ் ஆகியோர் புது முகங்களாக லேபர் கட்சி சார்பில் நாடாளுமன்றம் செல்லவுள்ளனர்.

லிபரல் கூட்டணி சார்பில் நாடாளுமன்றம் செல்வதற்கு இதுவரை 7 பெண் எம்.பிக்கள் தகுதிபெற்றுள்ளனர். சுயாதீன அணிகள் சார்பிலும் பெண்கள் அதி உயர் சபைக்கு செல்லவுள்ளனர்.


எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI




## உள்ளூராட்சி சபைத் தேர்தல்

# தேசிய மக்கள் சக்தியின் வீழ்ச்சியும் தமிழ்த் தேசியத்தின் மீள் எழுச்சியும்







● ஜெரா


உள்ளூராட்சிசபை தேர்தல் முடிவுகளின் பின்னர், வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு சிறு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதாவது கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழ் மக்கள் வடக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளை பெருமளவில் நிராகரித்திருந்தனர். இனிமேல் வடக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எதிர்காலம் இல்லை என்கிற அளவிற்கு ஜனநாயக ரீதியான முடிவைத் தமிழ் மக்கள் எடுத்திருந்தனர். இந்த நிலைமை கிழக்கிற்கும் பரவும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் பெருவாரியாகத் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஆதரித்தமையானது, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மீள்நம்பிக்கையை வழங்கியிருக்கின்றது.

### தமிழ்த் தேசியக் கட்சிகளின் மீளெழுச்சி எப்படி சாத்தியமானது?

மேற்குறித்த வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டமைக்கு தேசிய மக்கள் சக்தி ஆகிய ஜே.வி.பி.யின் எழுச்சியும், எழுச்சிக்காக அது முன்வைத்த பரப்புரைக் கோசங்களும் பிரதான காரணம். ஊழலற்ற ஆட்சி, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் சார்ந்த விடயங்களில் தெளிவான புரிதலை வெளிப்படுத்தியமை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவோம் என அறிவித்தமை, அரசியல் கைதிகளை விடுவிப்போம் என்றமை எனப் பல வாக்குறுதிகளைத் தேசிய மக்கள் சக்தி தமிழர்களுக்குப் பிரத்தியேகமாக வழங்கியிருந்தது. ஆனால் கடந்த ஏழு மாத ஆட்சியில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை. மாறாக வடக்கிலிருக்கின்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை இணைத்து 5000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை அபகரிப்பதற்கான வர்த்தமானியை மாத்திரமே தேசிய மக்கள் சக்தி வெளியிட்டிருந்தது.

கடந்த வருட இறுதிப் பகுதியில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மீதான அதிருப்தி காரணமாகவும், தேசிய மக்கள் சக்தி, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மீது ஏற்பட்ட ஆதரவு அலை காரணமாகவும் தமிழ் மக்கள் வடக்கில் அதிகளவில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பினர். நபர்களைப் பாராமால், திசைகாட்டிச் சின்னத்திற்கே வாக்களித்து தமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர். ஆனால் தேர்தலின் பின்னரான கடந்த ஏழு மாத காலப்பகுதிக்குள் தாம் தவறான நபர்களைத் தெரிவுசெய்துவிட்டோம் எனத் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டனர். தேசிய மக்கள் சக்தி சார்பில் வடமாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுமே, நாடாளுமன்றத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் எந்தப் பிரச்சினைக்கும் குரல்கொடுக்கவில்லை. தமிழர்கள் என்றால் படித்தவர்கள், சரியான விடயங்களை ஆதாரபூர்வமாகப் கதைப்பார்கள் என்கிற மரபார்ந்த நம்பிக்கையை சிதைக்கும் வகையிலேயே தமிழ் மக்கள் தெரிவுசெய்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டார்கள். எல்லோரும் எள்ளி நகையாடுமளவிற்குப் பொதுவெளியில் செயற்பட்டார்கள். இதனை வெளிப்படுத்தியே உள்ளூராட்சி சபை தேர்தல் காலத்தில், “ஒரு பைத்தியத்தையும் மூன்று வெருளிகளையும் தெரிவுசெய்தது போதும்” என்கிற வசனங்களைத் தாங்கிய துண்டுப்பிரசுரங்கள் வடக்கில் ஒட்டப்பட்டன. இந்தத் தவறை உணர்ந்துகொண்ட தமிழ் மக்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஊழல் பேர்வழிகளாக இருப்பினும் தமிழ் தேசியக் கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கே வாக்களிக்கவேண்டும் என்கிற முடிவுக்கு வந்தனர்.

உள்ளூராட்சி சபை தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தியினர் வடக்கு, கிழக்கில் மேற்கொண்ட பரப்புரைகளில் தெரிவித்து வந்த கருத்துகளும், அவர்கள் செய்த மோசடிகளும் மக்களை அவர்களிடமிருந்து விலகிப்போகச் செய்தது. உதாரணமாக தேசிய மக்கள் சக்தி சார்பில் யாழ். மாநகர



சபையின் மேயர் வேட்பாளராகக் களமிறக்கப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஏழாலையை வதிவிடமாகக் கொண்டவர். ஆனால் வேட்புமனுவில் அவரை அரியாலையில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் வசிப்பவராகக் காட்டி மனுத்தாக்கல் செய்திருந்தனர். தேர்தல் சட்டத்தின்படி மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரப் பதிவுகளைக் கொண்டவர்கள், அல்லது கடந்த ஆறு மாதகாலப்பகுதிக்குள் பதிவினைப் பெற்றவரே யாழ்.மாநகர சபைக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட முடியும். கடந்த முறை கொக்குவில் பகுதியை வதிவிடமாகக் கொண்ட முன்னாள் மேயர் மணிவண்ணனும் இதுபோன்ற பிரச்சினையை சட்டரீதியாக எதிர்கொண்டார். இதனால் அவர் பதவியை இழக்கும் நிலைகூட ஏற்பட்டது. அவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னரே இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டும் இருந்தது. ஆனால் இம்முறை தேசிய மக்கள் சக்தி சார்பில் மேயர் வேட்பாளராகப் போட்டியிட்டவர், வேட்பு மனுத்தாக்கல் செய்த உடனேயே அம்பலமாகிவிட்டார். ஊழலை ஒழிப்போம், அதிகாரத் துஷ்பிரயோகங்களை அழிப்போம் எனக் கூறி ஆட்சியைப் பிடித்த தேசிய மக்கள் சக்தி இப்படி படுமோசமாக மக்களை ஏமாற்றுகின்றது என்பதை மக்கள் தேர்தலுக்கு முன்பே உணர்ந்துகொண்டார்கள். எனவே தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் மீளத்திரும்பினார்கள்.

அதேபோல தேர்தல் காலத்தில் வடக்கிற்குப் பரப்புரைக்காகப் படையெடுத்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரும், ஏனைய அமைச்சர்களும் கட்டுக்கடங்காத வகையில் தேர்தல் விதிமுறை மீறல்களில் ஈடுபட்டனர். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, வடக்கு, கிழக்கில் தமது கட்சியைத் தவிர ஏனையோருக்கு வாக்களித்தால் அவர்களுக்கு நிதி வழங்க முன் நூறுமுறை யோசிப்போம் என மிரட்டினார். அதாவது தமது கட்சியைத் தவிர்ந்த ஏனையவர்களுக்கு வாக்களித்து, அவர்கள் சபைகளை அமைத்தால், அந்த சபைகளுக்கான நிதி வழங்கப்படாது என்கிற மாதிரியான பயத்தை வாக்காளர்களிடையே ஏற்படுத்தி வாக்கினைப் பெற முயற்சித்தார். பிரதமர் ஹரிணி அமரசூரிய யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களுக்குள் நுழைந்து பரப்புரைகளில் ஈடுபட்டார். ஆலயங்களுக்குள் பிரவேசித்து பரப்புரையில் ஈடுபடக்கூடாது என தேர்தல் சட்டம் கூறினாலும் பிரதமர் அதனைக் கவனத்தில் எடுக்கவில்லை. வடக்கிற்கு வருகைதந்த நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் பிமல் ரத்னாநாயக்க வவுனியாவில் வைத்து, வடக்கில் இருக்கின்ற பெரிய தமிழ்க் கட்சி தேசிய மக்கள் சக்தி என்றார். கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தம் கட்சியிடமே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி இருக்கிறார். எனவே தம்மிடம் அனைத்து அதிகாரமும் உண்டு. எதை வேண்டுமானாலும் செய்வோம் எனத் தம் அதிகாரத் திமிரைப் பொதுமக்களிடம் காட்டினார். இப்படி தேசிய மக்கள் சக்தியின் அனைத்துத் தரப்பினரும் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்ற முன்னரே அச்சுறுத்துகின்றனர். ஆட்சியை அவர்களிடம் கொடுத்தால் நிலமை இன்னும் மோசமடையும் என்கிற அச்சத்தில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்தனர்.

இவையெல்லாவற்றையும் விட இந்த உள்ளூராட்சி சபை தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தேசிய மக்கள் சக்தி ஆகிய ஜே.வி.பி.யினர் கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆதாரபூர்வமான தகவல்களை வெளியிட்டனர். எனவே ஜே.வி.பி.யின் உண்மை முகத்தை விளங்கிக்கொண்டவர்களும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குத் தம் வாக்கினை அளித்தனர். இதுதான் வடக்கில் எழுச்சி பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கட்சிகளைக் கடந்த ஏழு மாதங்களுக்கு முன்பு வீழ்ச்சியடையச் செய்து அந்த இடத்தைப் பிடித்துக்கொண்ட தேசிய மக்கள் சக்தி, மிகக்குறுகிய காலத்தில் இங்கே வீழ்ச்சியடைவும், தமிழ் தேசியம் மீளெழுச்சி பெறவும் காரணமாக அமைந்தது. ■

# அகம், புறம், சங்க(ம)ம்

## பெருந்தகை புண்பட்டாய்!



காஷ்மீரில் நடந்த பஹல்கம் நடந்த தீவிரவாத தாக்குதலுக்கு பிறகு , இந்தியா- பாகிஸ்தான் போர் மேகம் சூழ்ந்த நிலையில் சிலநாள்கள் பெரும் பதற்றமாக இருந்தது. சமூக ஊடகங்களில் தொடர்ந்து சில நாட்களாக அட்டகத்தி சண்டை நடைபெற்று வருகிறது. அங்கே நடந்த போரினைவிட சமூக ஊடக போராளிகள் சுற்றும் பொய்களும் , வார்த்தை சவடால்களும் தாங்க முடியவில்லை. எல்லையில் நடக்கும் போரினை விட இவர்கள் அக்கப்போர் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கிறது.

சங்க காலத்தில் நம் முன்னோர்கள் உடல் நலம் குன்றி போர்க்களம் ஏதும் போகாமல் சாவதை விட, போர்க்களம் புகுந்து தம் பகைவர்களுடன் போராடி புறமுதுகிட்டு சாவதை விட , அவர்களது வாளால் தம் உடல் பிளவுபட்டு உயிர் துறப்பதையே வீரத்தின் அடையாளமாகக் கருதியிருக்கின்றனர். சங்க காலத்தில் வாழ்ந்த அதியமான் பகைவர்கள் அனைவரையும் போரில் வென்றான். போரில் எத்தனை வெற்றிகள் பெற்றாலும், அவன் போரில் பகைவர்களால் தாக்கப்பட்டு மார்பிலும் , முகத்திலும் விழுப்புண்பட்டான். போரில் வெற்றி வாகை சூடிஎப்போதும் , தன் உடல் முழுவதும் விழுப்புண்ணோடு இருக்கும் அதியமானைக் கண்ட ஔவையார் இப்பாடலில், “மன்னா , உன்னால் போரில் தோற்கடிக்கப்பட்ட பகைவர்கள் எல்லாப்பக்கமும் சிதறியோடினார்கள். அவர்கள் அவ்வாறு தோற்று ஓடியதால் அதியமானின் வாளால் வெட்டப்பட்டு இறந்து போவதிலிருந்து எப்படியோ தப்பிவிட்டனர் . இவ்வாறு பகைவர்கள் அனைவரும் ஓடிப்போய்விட்டதால், இனி போர்கள் நடைபெற வாய்ப்பில்லை இவ்வாறான சூழ்நிலையில் நீ போர்களில் வெற்றி பெறுவது எப்படி?” என்று வியந்து கூறுவதாக இந்த பாடல் அமைந்துள்ளது.

திணை: வாகை. வாகைப்பூவைத் தலையில் சூடிப் பகைவரைக் கொன்று ஆரவாரித்தல்.

துறை: அரச வாகை. அரசனது வெற்றியைக் கூறுதல்.

பாடியவர் : ஔவையார்

பாடப்பட்டோன் : மன்னன் அதியமான்

திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்றுஅமர் கடத்தல் யாவது? வந்தோர்
தார்தாங் குதலும் ஆற்றார் வெடிபட்டு
ஓடல் மரீஇய பீடுஇல் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்

காதல் மறந்துஅவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
மறம்கந்து ஆக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கஎன

வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ
வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து
அண்ணல் யானை அடுகளத் தொழிய
அருஞ்சமம் ததைய நூறிநீ
பெருந் தகை விழுப்புண் பட்ட மாறே !

ஜபுறநானூறு - 93ஸ

அருஞ்சொற்பொருள்:

திண்மை = வலிமையான ; பிணி ஸ்ரீ கட்டு; அமர் = போர் கடத்தல் = வெல்லுதல் யாவது = எப்படி ; தார் = முப்படை; வெடிபடுதல் = சிதறுதல். மரீஇய = தழுவிய் விளித்தல் = இறத்தல் யாக்கை = உடல் தழீஇய = தழுவிய. 6. மருங்கு = பக்கம், விலாப்பக்கம் கந்து ஸ்ரீ பற்றுக்கோடு;உழி = இடம். போழ்தல் = பிளத்தல் உய்ந்தனர் = தப்பினர் ஞிமிறு = வண்டு, தேனீ;ஆர்க்கும் = ஒலிக்கும் கடாம் = யானையின் மத நீர் அடுகளம் = போர்க்களம். சமம் = போர் ததைதல் = சிதைதல் நூறுதல் = வெட்டுதல், அழித்தல் மாறு = ஆல்.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

உரை:

மன்னர் பெருந்தகையே! உன்னை எதிர்த்து வந்த சிறுமை படைத்த பகை மன்னர்கள் அனைவரும் உன்னுடைய முப்படைகளின் வலிமை தாங்க முடியாமல் சிதறி ஓடினர். நான்கு வேதங்களையும் நன்கு கற்றறிந்து அறத்தை விரும்பும் பார்ப்பனர், நோயுற்று இறந்த போன (போரில் தொற்று ஓடிய ) உடலை எடுத்து வந்து, அவர்கள் போரில் சண்டை செய்து விழுப்புண் பட்டு இறக்காத பாவத்தை நீக்க வேண்டி,, செம்மையான, விரும்பத்தக்க பச்சை நிறமுள்ள தருப்ப புல்லைப் பரப்பி, அதில் அவர்களின் உடலைக் கிடத்தி, “தமது ஆண்மையில் பற்றுடன் போரில் மாய்ந்த வீரக்கழலணிந்த வீரர்கள் செல்லும் உயரிய இடத்திற்குச் செல்க” என வாளால் பிளந்து அடக்கம் செய்யப்படும் இழிவிலிருந்து தப்பினர். தன உடலின் மேல் வரிகளை உடைய வண்டுகள் ஓங்காமல் ரீங்காரம் ஒலித்து , எதிரே ஓடி வரும் மதம் கொண்ட யானைகளைப் போர்க்களத்தில் நெருங்கி அழித்து விழுப்புண் பட்ட சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறாய். இனி போர் முரசொலி எழுப்பும் “இழும்” என்னும் ஒலியுடன் போரில் வெல்வது எப்படி? பகைவர்கள் ஓடியதால் இனி என்றுமே போர்கள் நிகழ வாய்ப்பில்லையே !



32 YEARS OF SERVICE

மெல்பேர்னில் உங்கள் அபிமான வானொலி சேவை

சங்கநாதம்

3MDR 97.1FM

3MDR 97.1 fm mountain district radio

பிரதி ஞாயிறுதோறும் காலை 8 மணிமுதல் 10 மணிவரை கேட்டு மகிழலாம்

SANGANATHAM TAMIL COMMUNITY BROADCAST FM 97.1 ON SUNDAY 8AM TO 10AM

WEB www.sanganatham.net.au sanganatham@gmail.com vtca sanganatham


ATOP IMPORTS
FLOORING
Yes, We are
OPEN NOW
We Install & Supply All Types Of Flooring Products!
Solid Parquetry
Engineered Oak
Strip Flooring
Hybrid Flooring
Engineered Parquetry
Laminated Flooring
Tiles
Carpets
Herringbone Flooring
DON'T MISS OUT ON OUR GRAND OPENING
MEGA SALE
Cladding
0433071956
03 87535351
1/44 Princes Hwy, Eumemmerring VIC 3177
www.atopimports.au

Transco™ CARGO

FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU